விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 06 வெள்ளிக்கிழமை (20.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 183

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## விசாரணை குறித்து ஆராய உதவிச் செயலர் வருகை

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சு

**(கொழும்பு) இலங்கையில் ஐ.நா.விசாரணையை நடத்துவது குறித்து ஆராயும் நோக்கில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார பிரிவில் பணியாற்றும் தெற்காசியாவுக்குப் பொறுப்பான பிரதி உதவிச் செயலாளர் அதுல் கேசாப் நேற்று இலங்கை வந்துள்ளார்.**

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கையில் விசாரணை நடத்துவது குறித்து ஆராய்வதற்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பிரிவில் பணியாற்றும் தெற்காசியாவுக்குப் பொறுப்பான பிரதி உதவிச் செயலாளர் அதுல் கேசாப் நேற்று உத்தியோக பூர்வமாக இலங்கை வந்துள ளார்.

இலங்கை வந்துள்ள அவர் அரச, எதிர்க்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளைச் சந்திக்கிறார். இதன்படி நேற்று முற்பகல் 11 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை கொழும்பில் சந்தித்தார்.

சுமார் அரை மணி நேரம் இடம பெற்ற இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன், பேச்சாளரான சுரேஷ் பிரேமச் சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் தற்

20ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம் பகுதிகளில் நேற்று கடையடைப்பு

(கொழும்பு)

அளுத் கம பகுதியில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட வன்முறை தாக்குதல்களைக் கண்டித்தும், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யக் கோரியும் நாட்டில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதிகளில் கடையடைப்பு மேற்கொள்ளப் பட்டது.

நாடுதழுவிய அளவில் இந்த பணிபுறக்கணிப்பை மேற்கொள்ளு மாறு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு அழைப்பு விடுத்திருந்தது.

தலைநகர்கொழும்பிலும், வடக்கே வவுனியா, மன்னார், யாழ்பபாணம் ஆகிய நகரங்களிலும் இந்தக் கடையடைப்பு

20ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் பயிற்சி !

### சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் தீவிரவாதப் பயிற்சி அளித்து வருவதாகவும், இது மிகவும் ஆபத்தானது எனவும் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித் துள்ளார்.

நேற்று டில்லியில் பத்திரிகையாளர்களிடம் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் உள்ள முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான் பயிற்சி அளிக் கிறது. இது மிகவும் ஆபத்தானது.

இவ்விவகாரத்தில் மத்திய அரசு இலங்கை அரசுடன்ஒத்துழைக்க வேண்டும். இந்தியத் துணைக் கணடத்திலி

20ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேசத்துடன் இணைந்து இலங்கை செயற்பட வேண்டும்

### ஐ.நா.செயலாளர் வலியுறுத்தல்

(கொழும்பு)

சர்வதேசசமூகத்துடன்இணைந்து ஆக்கபூர்வமாக இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டுமென ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்வதற்காக குழுவொன்று இங்கு விஜயம் மேற்கொள்ளக்கூடாது என பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பில் நியுஸ்பெஸ்ட் மின்னஞ்சல் மூலம் நேரடியாக வினவிய போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் நாட்டினுள் சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதை தடுப்பதற்கான பிரேரணை 134 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று

20ஆம் பக்கம் பார்க்க....

## அளுத்கம வன்முறைகளை கண்டித்து யாழ்.பல்கலையில் ஆர்ப்பாட்டம்

### பெருமளவானோர் திரண்டு அரசுக்கு எதிராக கோசம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது இடம்பெறுகின்ற முஸ்லிம்கள் மீதான வன்முறையினை கண்டித்து யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று மதியம் 12.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது.

அளுத்கமவில் இடம்பெற்ற கலவரத்தில் முஸ்லிம்கள் படுமோசமாக தாக்கப்பட்டு அவர்களின் பொருளாதாரமும் சிதைக்கப்பட்டன.

இவ்வாறு நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற சிறுபான்மையினர் மீதான வன்முறையினை கண்டித்தே யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தில் இடம்பெற்றது.




இலங்கையில் முஸலிம்களிற்கு எதிராக இடம்பெற்று வருகின்ற வன்முறைகள் தொடர்பில் உலக நாடுகள் கவனம் செலுத்தி வருகின்ற நிலையில் வன்முறைகளினை கண்டித்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் யாழ்.பல்கலை வளாகத்தில் ஆரம்பித்து யாழ்.பல்கலைக் கழக முகப்பு வாயில்

20ஆம் பக்கம் பார்க்க....

## ஒன்றரைக்கோடி பெறுமதியான கேரளக் கஞ்சா மடக்கிப்பிடிப்பு

### இளவாலைப் பொலிஸார் அதிரடி



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின கேரளா பகுதியில் இருந்து கடல்வழியாக யாழ்ப்பாணத்திற்கு கஞ்சாவினைக் கடத்திய நபர் ஒருவரை மாதகல் பகுதியில் வைத்து இளவாலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்த ஒரு கோடியே 33 இலட்சம் ரூபாய் பெறுமதியான 133 கிலோக் கிராம் நிறையுடைய கஞ்சா

20ஆம் பக்கம் பார்க்க....

## அடிப்படைவாத குழுக்கள் தடைசெய்யப்பட வேண்டும்

### முஸ்லிம் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

முஸ்லிம், கிறிஸ்தவர்கள் உட்பட இதர மதத்தினருக்கு எதிராக வன்முறை, வெறுப்புணர்வு மற்றும் அச்சுறுத்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வரும் அடிப்படைவாத குழுக்கள் குறித்து விசாரணை நடத்தி அந்த குழுக்களை தடைசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை முஸ்லிம் பேரவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதியொன்றை முஸ்லிம் பேரவை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளது.

அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள், உயிரிழப்புகள், காயங்கள், வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீதான பாரிய வன்முறைகள் காரணமாக முஸ்லிம் மக்கள் மத்தியில் அச்சம் அதிகரித்துள்ளது.

அளுத்கமவில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு அங்கு நடத்தப்பட வருந்த பேரணியை தடுத்து நிறுத்துமாறு முஸ்லிம் பேரவை உட்பட முஸ்லிம் அமைப்புகளும் அரசியல வாதிகளும் பொலிஸ் மற்றும் ஏனைய அதிகாரி

20ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

K.K.S வீதி முதலி கோயில் ஒழுங்கையில் ஒரு குடும்பத்துக்கு போதுமான வீடு உண்டு.

**தொடர்பு: 0777035457**

(6904)

## தவறிவிட்டது

60/4, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் வன்னியன் சிவசுப்பிரமணியம் என்பவருடைய 362461162V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை திருநெல்வேலிக்கும் இலுப்பையடி சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு : 0775386262**

(6800)


# சமாதான சுட்டியில் இலங்கை 105 ஆம் இடம்

(கொழும்பு)

உலக சமாதான சுட்டியின் அடிப்படையில இலங்கை 105 ஆம் இடத்தை வகிப்பதாக பொருளாதார மற்றும் சமாதானத்திற்கான நிறுவகம் அறிவித்துள்ளது.

உலகின் 162 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தென் ஆசியாவில் இலங்கை நான்காம் இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தர வரிசையில் இந்தியா 5 ஆம் இடத்தையும், உலக அளவில் 143 இடத்தையும் வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டு முதல் உலக அளவில சமாதானத்திற்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

உலகில் சமாதானமான நாடுகளாக டென்மார்க், ஒஸ்ட்ரியா, நியூசிலாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

சிரியா, தென் சூடான், ஆப்கானிஸ்தான், ஈராக், சோமாலியா, கொங்கோ ஜனநாயக் குடியரசு, மத்திய ஆபிரிக்கா, பாகிஸ்தான், வட கொரியா உள்ளிட்ட நாடுகள் சமாதான வரிசையில் கடை நிலையை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)


**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

**ANNUAL PRIZE GIVING 2014**

Saturday 21st June 2014
at 10.00 a.m

**Chief Guests**

Mr.Bernard Sinniah
Managing Director, Citibank, London
&
Mrs. Anita Sinniah

**Chairman**

Ven S.J. Jeyaveerasingan
Archdeacon of Jaffna & Manager of the College

**Parents, old boys & well-wishers are cordially invited**

Principal, Staff & Students

(C-7701)


# கைதான தமிழக மீனவர்கள் 24 பேருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறிப் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டவேளை கைதுசெய்யப்பட்ட இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் 24 பேரையும் எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான நீதிமன்றம் நேற்று பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்த மீனவர்கள் 24 பேரும் நேற்றுக்காலை யாழ்.கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று பிற்பகல் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவில் உள்ள புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டணத்தைச்சேர்ந்த இந்த மீனவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை தமது சொந்த இடத்தில் இருந்து கடலுக்கு புறப்பட்டதாகவும் கடலில் அதிகளவான காற்று வீசியமையால் தம்மால் உடனடியாக திரும்ப முடியாத நிலைமை ஏற்பட்டதுடன் கடலில் வீசிய அதிகரித்த காற்றினால் இலங்கை கடல் பகுதியை நோக்கி தள்ளப்பட்டதாகவும் இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை கடற்பரப்புக்கு அப்பால் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. அவரகள் பயணித்த 6 படகுகளும் இதன்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை மற்றும் ஒரு சம்பவத்தின் போது தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து 23 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த 5 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டதுடன் கைதுசெய்யப்பட்டவர்கள் மன்னார் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# முஸ்லிம் பெண்ணை திருமணம் செய்ய விரும்புகிறாராம் மேவின்!

(கொழும்பு)

நாட்டில் சீர்கெட்டு வரும் சிங்கள - முஸ்லிம் இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக தாம் முஸ்லிம் பெண்ணொருவரை திருமணம் செய்ய விருப்பத்துடன் இருப்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

களனியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முஸ்லிம் பெண்ணை தான் திருமணம் செய்தால், முஸ்லிம்களும் சிங்களவர்களும் இரத்த சொந்தங்களாக மாறுவார்கள் எனவும் இதனை முஸ்லிம்களும் ஏற்றுக்கொள்வார்கள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இனவாதம், மத மற்றும் வகுப்பு வாதங்கள் நாட்டில் இல்லை. துரதிர்ஷ்டவசமாக அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்கள் நடந்தன. ஜனாதிபதியின் உத்தரவின் பேரில நான் அந்த பிரதேசங்களுக்குச் சென்றேன்.

அந்த பிரதேசங்களில் உயிர்கள் இழக்கப்பட்டன. சிங்கள மற்றும் முஸ்லிம் என இரண்டு தரப்பு மக்களின் சொத்துக்களுக்கு அழிவுகள் ஏற்பட்டன.

முஸ்லிம்கள் எமது இரத்த சொந்தங்கள். அவர்கள் எமக்கு பெண்களை மணம் முடித்து கொடுப்பதில்லை. ஆனால் சிங்கள பெண்களை மணந்துள்ளனர்.

முஸ்லிம்கள் சிங்களவர்களுக்கும் பெணகளை மணமுடித்து கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

அப்படி பெண்ணை தருவதாக இருந்தால், எனது மனைவி மற்றும் பிள்ளைகள் என்னை திட்டினாலும் பரவாயில்லை தேசிய ஒற்றுமைக்காக நான் முஸ்லிம் பெண்ணை திருமணம் செய்ய தயாராக இருக்கின்றேன்.

முஸ்லிம் பெண்ணை மணந்து கொண்டால், நான் முகத்தை மூடிக் கொண்டு எந்த சண்டைக்கு வேண்டுமானாலும் போக முடியும் எனவும் அமைச்சர் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (எ-11)


**CBF/IABF**

வங்கியியல் கற்கை நெறிகள் பிரத்தியேகமாக கற்பிக்கப்படும்

**தொடர்பு : 0773586563**

(6799)


# மரண அறிவித்தல்



## திருமதி ஐயாத்துரை சிவபாக்கியம்

(முன்னாள் மருத்துவதாதி யாழ்.அரசினர் வைத்தியசாலை)

சாவகச்சேரி நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் மெல்போர்ன் அவுஸ்ரேலியாவில் தற்போது வசித்து வந்தவருமான திருமதி ஐயாத்துரை சிவபாக்கியம் 16.06.2014 திங்கட்கிழமை அவுஸ்ரேலியாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்புமனைவியும், சாந்தகுமார் (அவுஸ்ரேலியா), இதயகுமார்(நம்பியார்.நுணாவில்), பிறேமாவதி (அவுஸ்ரேலியா), ஆகியோரின் அன்புத்தாயாரும், லோகராணி (அவுஸ்ரேலியா), (காலஞ்சென்ற) கலாசோதி ஆறுமுகசாமி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சித்தார்த், வைகாத் (அவுஸ்ரேலியா), மிதுலா(லண்டன்), நிருத்திகா, வேணிலா, நிவிதா, ரேணுஹா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பேர்த்தியும், ஆரன், ஆசினி, ஆதூஸ் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.06.2014 ஞாயிறு BOYD CAAPEL SPRINGVALE BOTANICAL CEMETERY இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார, உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆறுமுகம் வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
சாந்தகுமார் (அவுஸ்ரேலியா) 0061387627773
பிறேமாவதி (அவுஸ்ரேலியா) 0061398934516

தகவல் :
ஐ.இதயகுமார்
(நம்பியார்) (மகன்)
0773991394

(சி-7702)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.சு.சுரேஸ்குமார்**

(BSc (Hons) MBA (Lon)

எமது இரசாயனவியல் ஆசிரியர் திரு.சு.சுரேஸ்குமார் BSc (Hons) MBA (Lon) அவர்கள் SCIENCE CORNER இல் புது வேகத்துடன் வளர்ச்சி அடைவது கண்டு பாராட்டுக்களையும் மேலும் வளர வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

**வாழ்த்துவோர் :**
ஆசிரியரிடம் கற்று மருத்துவபீடம் செல்லும் 2013 மாணவர்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பேரணி







(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபை முதல்வர் தலைமையில் ஊழியர்கள் அனைவரும் இணைந்து சுகாதார எழுச்சி பேரணியொன்றினை நேற்றுக் காலை 9 மணிக்கு மேற்கொண்டனர்.

உள்ளூராட்சி வாரம் யாழ்.மாவட்டத்தில் கடந்த 16 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

அதன்படி பல்வேறு நிகழ்வுகளும் சமூக வேலைத்திட்டங்களும் மாநகர சபையினால் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநகர சபை ஊழியர்கள் அனைவரும் இணைந்து சுகாதார எழுச்சி ஊர்வலம் ஒன்றினை நடத்தியுள்ளனர்.

யாழ்.மாநகர சபைக்கு முன்பாக ஆரம்பமான இந்த பேரணியானது பருத்தித்துறை வீதியூடாக ஆரியகுளம் சந்தியை அடைந்து அங்கிருந்து ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு கோபுர வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக மீண்டும் மணிக்கூட்டு கோபுர வீதியை அடைந்து அங்கிருந்து யாழ்.பொதுநூலக வீதியூடாக பிரதான வீதியை அடைந்து அங்கிருந்து துரையப்பா விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தது. மேலும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# செவிப்புலன் உபகரணங்கள் 663 பேருக்கு வழங்கப்படும்

யாழ்ப்பாணத்தில் செவிப்புலன் குறைபாடுடையவர்களுக்கு செவிப்புலன் உபகரணங்கள் வழங்குவதற்கான பயனாளர்களை தெரிவு செய்யும் மருத்துவ முகாமொன்று கடந்த வாரம் (ஜுன் மாதம் 9,10 ஆகிய தினங்களில்) யாழ்ப்பாணம் பொது மக்கள் தொடர்புகள் அலுவலக வளாகத்தில் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகள் கட்டளைத் தலைமையகத்தின் பொது நலத் திட்டத்தின் ஒரு அங்கமாக நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

அவர்களில் 663 பேர் செவிப்புலன் உபகரணங்கள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டதுடன் இவர்களுள் பாடசாலை மாணவர்கள் 59 பேரும் அடங்குவர்.

ஐக்கிய அமெரிக்காவின் star key Hearing Aids manufactures நிறுவனத்தினால் இந்த செவிப்புலன் உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் இலங்கை இராணுவத்துடன் இணைந்த நுகேகொடை Synergen Health PVt & Lt நிறுவனம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தத்திட்டத்தின் ஊடாக ஏனைய பிரதேசங்களையும் உள்ளடக்கி 2000 பேருக்கு செவிப்புலன் உபகரணங்கள் பெற்றுக் கொடுக்க இராணுவம் எதிர்பார்த்துள்ளது.

எதிர் வரும் நவம்பர் மாதம் இந்த செவிப் புலன் உபகரணங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகள் கட்டளைத் தலைமையகம், 4 ஆவது இலங்கை மருத்துவப் படையணி மற்றும் பலாலி இராணுவ வைத்தியசாலை ஆகியன இணைந்து ஒழுங்கு செய்திருந்த. இந்த மருத்துவ முகாமிற்கு 4 ஆவது இலங்கை மருத்துவப் படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் சிதத் அமரசேகர மற்றும் பலாலி இராணுவ வைத்தியசாலையின் இரண்டாவது கட்டளை அதிகாரி கப்டன் பிரபாஷவரி விஜேகோன் ஆகிய வைத்தியர்களும் star key Hearing Aids manufactures நிறுவனத்தின் அனில் சவ்ஹான் மற்றும் சாய்கிரான் சத்திய நாராயண ஆகிய செவிப்புலன் நிபுணர்களும் Synergen Health PVt & Lt நிறுவனத்தின் முகாமையாளர் டாக்டர் பிரனாந்து உட்பட 7 பணியாளர்களும் இராணுவ மருத்துவமனையின் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

விக்கிரமரச்சி ஒப்டிசன்ஸ் நிறுவனம், விஷன் கெயா நிறுவனம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசால்ல ஆகியவற்றால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. (அ)

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் கலை இலக்கிய போட்டி முடிவுகள்

(கரணவாய்)

(நேற்றைய தொடர்ச்சி)

கரவெட்டி பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கலை இலக்கிய போட்டிமுடிவுகளைபிரதேசசெயலாளர் ச.சிவசிறி அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**பாடல், ஆக்கப் போட்டி**

திருமதி பத்தினிப்பிள்ளை வல்லிபுரம்–(துன்னாலைமத்தி, கரவெட்டி), சி.செகராசசிங்கம் –(சந்திரோதயம் அல்வாய் தெற்கு, வதிரி கரவெட்டி), க.பாலன் –(வீமன் புலம் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி வல்வெட்டித்துறை).

**நாட்டார் கலை கற்றல் போட்டி**

தங்கலீலா கந்தசாமி–(உச்சில் ஒழுங்கை கரவெட்டி தெற்கு கரவெட்டி), க.பாலன் –(வீமன் புலம் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி வல்வெட்டித்துறை) (இருவர் மூன்றாம் இடம்) சி.செகராசசிங்கம்–(சந்திரோதயம் அல்வாய் தெற்கு, வதிரி கரவெட்டி), கெ.சுவர்ணலதா –(சாமியன் அரசடி, கரவெட்டி மத்தி,கரவெட்டி).

**விவரணப் போட்டி**

திருமதி ஆனந்தராணி நாகேந்திரன்–(மஹாத்மா வீதி, நெல்லியடி கரவெட்டி), வேலும்மயிலும் நந்தகுமார் –(121 பெரிய தோட்டம் கட்டைவேலி, கரவெட்டி கிழக்கு கரவெட்டி) கெ.சுவர்ணலதா–(சாமியன் அரசடி கரவெட்டி மத்தி, கரவெட்டி).

**சிறுகதைப் போட்டி**

திருமதி இந்திராதேவி ஆனந்தராஜா–(ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம், வதிரி கரவெட்டி), திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் –(மஹாத்மா வீதி, நெல்லியடி கரவெட்டி), சிவசுப்பிரமணியம் ஜெயசங்கர் –(துன்னாலை மத்தி கோயிற் கடவை, கரவெட்டி).

**கவிதைப் போட்டி**

கெ.சுவர்ணலதா–(சாமியன் அரசடி கரவெட்டி மத்தி, கரவெட்டி), நடேசன் பாக்கியநாதன் –(பாடசாலை வீதி இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி), அ.ம.ஜெபரத்தினம் –(துபாற்கந் தோரடி கொடிகாம வீதி, கரவெட்டி).

**சிறுவர் க்தைப் போட்டி**

க.பாலன் –(வீமன் புலம் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி வல்வெட்டித்துறை), திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் –(மஹாத்மா வீதி, நெல்லியடி கரவெட்டி), சி.செகராசசிங்கம்–(சந்திரோதயம் அல்வாய் தெற்கு, வதிரி, கரவெட்டி).

**கவிதைப் போட்டி (ஆங்கிலம்)**

சிவசுப்பிரமணியம் ஜெயசங்கர் –(துன்னாலை மத்தி கோயிற் கடவை கரவெட்டி), அருள்நிதி நேசரஞ்சன்–(அருளகம் நெல்லியடி வடக்கு, கரவெட்டி),க.பாலன் –(வீமன் புலம் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி வல்வெட்டித்துறை).

(முற்றும்) (அ-60)

# இராசி பலன்

**20.06.2014**

**(ஆனி 06, வெள்ளிக்கிழமை)**

**சூரிய. உதயம் காலை 5.56 மணிக்கு**

**அட்டமி பிற்பகல் 4.14 மணிவரை**

**உத்தரட்டாதி பின்னிரவு 2.19 மணிவரை**

**இராகுகாலம் 10.24-11.54 மணிவரை**

**சுபநேரம் 5.54-7.24 மணிவரை**

**அட்டமி- நவமி**

வளவன்

**மேடம்** — கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள்.

**இடபம்** — இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, தொலைபேசிவழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.

**மிதுனம்** — தொட்ட காரியங்கள் வெற்றி பெறும், அரசு வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு

**கடகம்** — முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், உடல்நலன் சீராகும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**சிம்மம்** — சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி அவசியம், தேக நலனில் கூடிய கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**கன்னி** — தன்நம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், நண்பர்கள் சந்திப்பால் நம்பிக்கைகள் நடைபெறலாம்.

**துலாம்** — தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உடல் நலன் சீராகும், தொடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** — பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், பிள்ளைகளின் தேவை... எண்ணம் உருவாகும்.

**தனுசு** — பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், வாகன சுகமுண்டு.

**மகரம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** — குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள்.

**மீனம்** — வழிபாட்டால் திருப்திகாண வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், கற்பனை மிகுதியான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம்-5 மாணவர்களுக்கு பரீட்சை கருத்தரங்குகள்

வலி. தென் மேற்கு சண்டி லிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடாந்தம் நடத்தும் தரம் 5 மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் இவ்வாண்டும் இடம் பெறவுள்ளன.


இதில் தரம் 5 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் முகமாக வருடாந்தம் இடம்பெறும் இக் கருத்தரங்குகள் இவ் வருடமும் தொடர் கருத்தரங்குகளாக இடம்பெறவுள்ளன.




இதற்கமைய இதன் முதலாவது கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

கொழும்பிலிருந்து வருகை தரும் விசேட வழிகாட்டல் ஆசிரியர் குழுவினரால் இக் கருத்தரங்குகள் இலவசமாக இடம்பெற வுள்ளன.

இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு இளைஞர் கழகம் அறிவித்துள்ளது. (அ-23)




# தமிழக மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கை குறைவடைந்து வருகிறது

## தமிழக முதல்வரின் நடவடிக்கையால்

இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைவது தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதாவின் நடவடிகையால் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகின்றதென யாழ். இந்திய துணைத்தூதரக உதவித் துணைத் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி தெரிவித்துள்ளதாக முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எஸ்.விஜயகாந்த் தெரிவித்தார்.

முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில், நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயத்திலிருந்து யாழ். இந்திய துணைத்தூதரகம்வரை பேரணியொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்பேரணி முடிவில் எஸ்.டி.மூர்த்தியிடம் மகஜரை கையளித்ததுடன், கலந்துரையாடலையும் மேற் கொண்டார்.

இதன்போதே உதவித் துணைத்தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்திய வீட்டுத்திட்டத்தில் வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிதல், இந்திய மீனவர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்தல் மற்றும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல் செய்தல் தொடர்பில் இந்தியப் பிரதமர் தாமோதரதாஸ் நரேந்திர மோடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி இப்பேரணி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# வடமாகாண கல்வி அமைச்சுக்கு உதவி செயலாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)



ஹாட்லிக் கல்லூரியில் கடமையாற்றிய இ.க.நி. சேவை தரம் 11 ஐச் சேர்ந்த அதிபர் நடராசா தெய்வேந்தி ரராஜா வடமாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் அமைச்சுக்கு உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1999 இல் இருந்து 2005 வரை தெஹி யொவிற்ற வலயக் கல்விக் காரியாலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

இவர் யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம், யா/ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவராவார்.

இவர் 05.12.2005 இல் இருந்து இந்நிய மனம் வரை ஹாட்லிக் கல்லூரி அதிபராக கடமையாற்றியுள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக் கழக பௌதிக விஞ்ஞானப் பட்டதாரியுமாவார்.

இவருக்குரிய நியமனக் கடிதம் வடமா காணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனால் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# முப்பது குடும்பங்களுக்கு நல்லொழுக்க நிறுவனம் உதவி

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் பருத் தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரு கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கு பணங்கட்டி உற்பத்திகளை வழங்கியுள்ளது.

இதில் வல்லிபுரம் கிராமத்தில் 22 பெண்களுக்கும் புலோலி தெற்கு கிராமத்தில் 8 பெண்களும் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பனங்கடி உற்பத்தி உபகரணங்களும் கடன் அடிப்படையில் 10 ஆயிரம் ரூபாநிதியுதவியும்வழங்கப்பட்டுள்ளன.

இவ் உதவிகள் வவுனியா இராகம நிறுவன அனுசரணையுடன் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் திருமதி சவேந்திராதேவி ஜெயராஜா, இராகம பணிப்பாளர் விஜேவர்த்தன மற்றும் திட்ட முகாமையாளர் ஐ.லோக நாதன் ஆகியோர் கலந்து கொண்டு இவ் உதவிகளை வழங்கியுள்ளனர். (அ-10)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



சாரையடி புலோலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவகுமார் நீதியமைச்சின் சமாதான நீதவானாக நிய மிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய மாவட்ட நீதிபதி பருத்தித்துறை கே.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராவார். (அ-19)

# வட்டு. இந்து வாலிபர் சங்கம் மருந்து பொருட்கள் அன்பளிப்பு.



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க சமூக சேவைப் பிரிவினரால் வட்டுக்கோட்டை பிரதேசவைத்தியசாலைக்கு மருந்து பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மேற்படி வைத்தியசாலையின் நோயா ளர் நலன்புரிச்சங்கம் வைத்தியசாலைக்கு உட் பட்ட பிரதேசத்தில் சொறி சிரங்கு நோய்த் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் நோயாளர்கள் பாவிப்பதற்கென மருந்து பொருட்களை வழங்கி உதவுமாறு வட்டு.இந்து வாலிபர் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இவ்வேண்டுகோளுக்கமைய நோயாளர்களின் பாவனைக்கென ஒரு தொகுதி மருந்துப் பொருட்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வைத்து பிரதேச பொது சுகாதார பரிசோதகரிடம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கடந்த காலத்தில் அராலி, வட்டுக்கோட்டை பிரதேசத்தில் மருந்து பொருட்கள் இன்றி வைத்தியசாலைகள் மூடப்பட்டு இருந்த வேளையில் வைத் திய சாலைகளுக்கு மருந்துப் பொருட்களை வழங்கி வைத்தியசாலைகளை இயங்க வைத்ததாக சங்கத்தினர் தெரிவித்தனர். (அ)

# கலைஞர்களை கௌரவித்தல்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் தொடர்பான போட்டியில் வெற்றி பெற்ற நிகழ்வுகளின் அரங்கேற்றமும் கௌரவம் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இலங்கை க்லை வேந்தன் கல்லூரியில் ஆற்றுகை செய்யப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்காக முதலாம் பரிசாக ஒரு இலட்சம் ரூபா, இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபா, மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதோடு 4 தொடக்கம் 10 இடங்களைப் பெற்ற மன்றங்களுக்காக தலா 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.


அத்துடன் பங்குபற்றிய அனைத்து கலைஞர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (அ)

## மூன்று தினங்கள் கல்வி கண்காட்சி

(மானிப்பாய்)

உடுவில் மகளிர் கல்லூரியின் 190 ஆவது நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வருகிற 3 நாட்கள் கல்விக் கண்காட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது.


இதற்கமைய இக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை இறுதி நாளாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-23)




அளுத்கம பகுதியில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று நாடளாவிய ரீதியில் ஹர்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது யாழ்ப்பாணத்திலும் முஸ்லிம் மக்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி ஹர்தால் அனுஷ்டித்துள்ளதை படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவு.வில் முஸ்லிம் முன்னெடுத்த கண்டன கூட்டம்; பொலிஸார் தடுத்து நிறுத்தம்



(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் முஸ்லிம் மக்கள் ஒன்று திரண்டு நடத்த முற்பட்ட கூட்டம் பொலிஸாரால தடு த்து நிறுத்தப்பட்டுள்ளது.

அளுத்கம, பேருவளை ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை சம் பவத்தையடுத்து வவுனியாவில் நேற்றைய தினம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் முஸ்லிம் கடைகள் மாத்திரமே பூட்டப்பட்டு கண் டன கூட்டம் ஒன்றை முஸ்லிம் வர்த்த கர்களும் முஸ்லிம் தலைவர்க ளும் நகரப் பகுதியில் நடத்தி யமை யால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதனை அறிந்து அங்கு வந்த வவுனியா மாவட்ட பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி சன் அபேய வர்த்தன, "வவுனியாவில் அனை த்துச் சமூகத்தினரும் ஒற்றுமை யாக வாழ்கின்றமையால் அமைதி யைக் குழப்ப வேண்டாம் எனவும் நீங்கள் விரும்பினால் கடைகளைப் பூட்டி அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்துங்கள்.

பொது இடங்களில் கூடி குழப் பம் விளைவிக்க வேண்டாம். இங்கு இனங்களுக்கிடையிலோ, மதங்களிற் கிடையிலோ குழப்பம் ஏற்படமாட் டாது.

அதற்கு நாம் அனுமதிக்க மாட் டோம்" என்றும் அறிவுறுத்தி யதோடு அங்கிருந்து கலைந்து செலலுமாறு அவர் பணித்தார். இதனால் அங்கு கூடியவர்கள் கலைந்து சென்றனர்.

இந்நிலையில், வவுனியா சிவில் பாதுகாப்பு குழுவின் ஆலோசனை சபையும் பொலிஸ் அதிகாரிகளும் இணைந்து நேற்றையதினம் வவுனியா பொலிஸ் நிலையத்தில் இன,மத ரீதியாக ஏற்படும் வன்முறை களை தவிர்த்து ஒற்றுமையாக வாழ வேண்டுமென வலியுறுத்தி சர்வமத பிரார்த்தனை நிகழ்வை யும் மதத்தலைவர்களுக்கான ஆலோ சனை கூட்டத்தினையும் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (9-250)

# அம்பாள் குளம் புனரமைப்பு திருப்திகரமாக அமையவில்லை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள் குளத்தின் புனரமைப்பு பணிகள் திருப் திகரமாக அமையவில்லையென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இக் குளத்தின் புனரமைப்பு பணிகள் இடம்பெற்றது. இந்நிலையில் குளத்தின் துருசு குளக்கட்டு என்பன மாத்திரமே புனரமைக்கப்பட்டன. இவ்வாறாக அரைகுறையாக புனரமைப்பு பணிகள் முடிவடைந்துள்ளமையால் அக் குளத்தினை பயன் படுத்தும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின் றனர்.

இக்குளத்தினை விநாயகபுரம், அம்பாள் குளம், உதயநகர், கனக புரம், ஆனந்த நகர் உட்பட கிளிநொச்சியில் நடமாடும் வியாபாரத்தை மேற்கொள்ள வருகின்ற வியாபாரிகளும் நீராடுவதற்கும் ஆடைகளை துவைப்பதற்கும் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் குளம் ஆழ மாக்குதல், குளத்தைச் சூழவுள்ள பற்றைகளை அகற்றுதல் போன்ற எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, அம்பாள் குளத்தினை பயன்படுத்தக் கூடியளவில் மீண்டு மொரு முறை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-27)

## போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரல்

முக்கொம்பன் சின்ன பல்லவரா யன் கட்டு செவ்வானம் விளையாட் டுக் கழகம் நடத்தும் மென்பந்து மற்றும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட் டிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

இதில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அனு ப்பி வைக்குமாறும் 50 ரூபா பெறுமதி யானகுறித்தவிண்ணப்ப படிவங்களை வடிவுபிறண்ட்ஸ் குளிரகம், கனகபுரம் வீதி, சிவா பதிப்பகம்ஆகியவற்றில்பெற் றுக் கொள்ளலாமென கழகத்தினர் அறிவித்துள்ளனர். (9-254)




## குளவி தாக்குதல்

பூநகரி வாடியடி நகரப் பகுதியில் குளவித்தாக்குதலுக்குள்ளான மூவர் பூநகரி வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் புதன் கிழமை மேற்குறித்த பகுதியிலுள்ள முச்சக் கரவண்டி தரிப்பிடத்திலுள்ள ஆல யத்தின் கீழ் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது பந்து மரத்திலி ருந்த குளவிக்கூட்டைதாக்கி யுள்ளது.

இதனால் குளவிகள் பரவி தாக்கி யதனால் மூவர் தாக்குதலுக்குள் ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (9-84)

# இராணுவத்தின் பிடிக்குள் அகப்பட்டுள்ள ஒதியமலை

## வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டு



(குருமன்காடு)

தமிழர்களின் பூர்வீக இடங் களை பௌத்தமயமாக்கலில் முல் லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒதிய மலையும் அகப்பட்டுள்ளதாக வடமா காண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் குறிப் பிடுகையில், சுமார் 200 வருடங் கள் பழைமைவாய்ந்த ஒதியமலை வைரவ ஆலய வளாகத்தில் பௌ த்த சமயத்தின் அடையாளங்கள் திணிக்கப்படுகின்றன.

1984 டிசெம்பர் மாதம் 32 தமிழா களை படுகொலை செய்ததன் பின் னர் ஒதியமலையை விட்டு வெளி யேறிய மக்கள் 2010 ஆம் ஆண்டில மீள்குடியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் காலங்காலமாக தாம் வழிபட்டு வந்த மலையடி வைர வர் வளாகம் பற்றைகளால் நிரம்பி இருந்தமையால் ஊர் மக்கள் ஒன்று கூடி ஒதியமலை வைரவர் வளா கத்தை துப்புரவு செய்தனர்.

ஒதியமலைக் கிராம மக்களு க்கு ஒத்துழைப்பு வழங்கும் போர் வையில் இராணுவத்தினரும் சிரமதானத்தில் பங்கெடுத்து கோயில கும்பாபிஷேகம் உள்ளிட்ட அனை த்து நடவடிக்கைகளிலும் தங்களின் பங்களிப்பை வழங்குவதாக தெரி வித்திருக்கிறார்கள்.

எனினும் தற்போது மலையடி வைரவர் வளாகம் இராணுவத்தி னரால் கையகப்படுத்தப்பட்டதுடன் மலையோடு சேர்ந்ததாக இரா ணுவ முகாம் ஒன்று அமைக்கப் பட்டு அப்பகுதிக்கு எவரும் வரமு டியாதென உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

இவ் உத்தரவையும் மீறி கிளர் ந்தெழுந்த சிலர் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டு எச்சரி க்கை செய்யப்பட்டுள்ளனர்.

ஒதியமலை வளாகம் அரசா ங்க சொத்து எனவும் இங்கு மத அடையாளங்கள் எதுவும் இடப்பட லாகாது என்ற கருத்துக்களை திட்டமாக முன்வைத்த இராணுவ த்தினரும் பொலிசாரும் மக்களின் மலையடி வைரவர் சமய நடவடிக் கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ள்ளனர்.

இராணுவ முகாம்களால் சூழப் பட்டிருக்கும் ஒதியமலையில் ஆங் காங்கே குடியிருக்கும் தமிழ்க் குடும்பங்கள் இவர்களின் எச்சரிக் கைகளையும் தடுப்புகளையும் மீறி எதுவும் செய்ய முடியாத நிலைக்குட் பட்டுள்ளனர்.

முற்றுமுழுதாக இராணுவ அழுத்தங்களுள் மக்களை முடக்கி அவர்களின் உரிமைகளை மெல்ல மெல்ல பறித்து இயல்பு வாழ்க் கையை வெகுவாக சிதைத்து பௌ த்த மத அடையாளத்தை நிறுவ எத்தனிக்கும் பௌத்தமத வாதிக ளின் செயற்பாடுகளை முடக்குவ தற்கும் மீண்டும் ஒதியமலையில் சிவன் அடையாளத்தை நிறுவுவத ற்கும் முயற்சிகள் எடுக்கப்படுமென வும் இவ்விடயம் தொடர்பில் வட மாகாண சபையின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படும் எனவும் மக்களுக்கு தெரிவித்துள்ளார். (9-250)


## கொடி வாரத்தில் நிதி சேகரிப்பு

(கிளிநொச்சி)

சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினத்தையொட்டி வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் நடத்தப பட்ட கொடி வார நிகழ்வில் 5 இலட் சத்து 39ஆயிரம் ரூபா நிதி திரட்டப் பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் பி.ரி.எம். இர்பான் தெரிவித்துள்ளார்.

மேற்படி தொகை கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பளை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் நடத்தப்பட்ட கொடிவார நிகழ்வினூடாகவே சேகரிக்கப்பட்டு ள்ளது.

இந்தப் பணத் தொகையை சமுர த்தி பயனாளிகளில் வறுமைக் கோட் டிற்குட்பட்டவர்களுக்கு சமூகக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ள தாகவும் இதற்கான பயனாளிகள் தெரிவு ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-254)


வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் திட்டமிடல் குழு கூட்டம் அண்மையில் வவுனியா உதவி உள்ளூராட்சி திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வடமாகாண முதலமைச்சின் செயலாளர் எஸ்.திவாகரன், திட்டமிடல் செயலாளர் என்.உமாகாந்தன் ஆகியோரையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 83களில் தமிழ் மக்களுக்கு நடந்தவையே இன்று முஸ்லிம் மக்களுக்கு நடக்கின்றது

## வடக்கு முதலமைச்சர் கண்டனம்

அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடைபெற்றிருக்கும் வன்முறைச் சம்பவங்கள், 83களில் தமிழ் மக்களுக்கு நடந்தவையே இன்றைக்கு முஸ்லிம் மக்களுக்கு நடக்கின்றதோ என தாம் சந்தேகிப்பதாக வடமாகாண முதல்வர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்கள் உண்மையில் இனங்களுக்கிடையில், விரிசலினை உருவாக்கும் நோக்குடன் திட்டமிட்ட வகையில் நடைபெற்றிருக்குமானால் அதனை வன்மையாக கண்டிக்கிறோம்.

கொழும்பு, அளுத்கம பகுதியில் கடந்த சில தினங்களாக சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையில் உருவாகியிருக்கும் முறுகல் நிலை மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக முதலமைச்சர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்றிருக்கும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முழுமையான விபரங்களையும் நான் அறிந்திருக்கவில்லை.

எனவே அந்த விடயம் தொடர்பாக ஆழமான முறையில் என்னால் கருத்துச் சொல்ல முடியவில்லை.

ஆனாலும் தற்காலத்தில் முஸ்லிம் மக்களுக்கு பல பாதிப்புக்கள் உண்டாக்கப்படுவதை அவர்கள் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

மேலும் 83ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழ் மக்களுக்கு நடந்ததைப் போன்றே இப்போது முஸ்லிம் மக்களுக்கும் நடக்கின்றதா? என நாம் சந்தேகிக்க வேண்டியதாக இருக்கின்றது.

நான் சிறுவனாக இருந்த போது அதாவது சுதந்திரமடைவதற்கு முன்னர், தமிழ் மக்கள் எல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்திருந்தார்கள். அப்போது யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். வாழ முடியும். என்ற நிலையே காணப்பட்டது.

அன்று தெற்கிலிருந்து தமிழ் மக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விரட்டியடிக்கப்பட்டார்கள்.

அன்றைய செயற்பாடே இன்றைக்கும நடப்பதாக உணர்கின்றோம்.

எது எவ்வாறாக இருந்தாலும் முஸ்லிம் - சிங்கள மக்களுக்கிடையில் இன விரிசலை உண்டாக்கும் வகையில் அல்லது முஸ்லிம் இனத்தவர்களை முழுமையாக பாதிப்படையச் செய்யும் வகையில் மேற்படி வன்முறைச் சம்பவங்கள் திட்டமிட்ட வகையில் நடத்தப்பட்டிருக்குமானால் நாங்கள் அதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் மேலும் நடைபெறாமல் இருக்க வலியுறுத்துவோம என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)



அமெரிக்காவில் இருந்து வருகை தந்த சித்திரப் பாடவிரிவுரையாளர்களான ஜெனிதாகரத் மற்றும் யோகமணி ஆகியோர் இணைந்து தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலய முன்பள்ளி மாணவர்களுக்கான சித்திரப் பாடப்பயிற்சியினை அண்மையில் வழங்கியுள்ளனர். இதன்போது பயிற்சியினை வழங்கியவர்களும் பயன் பெற்ற மாணவ, மாணவிகளையும் வணக்கத்திற்குரிய எஸ்.செல்வநாயகம் போதகர் கலந்து கொண்டதையும் படத்தில் காணலாம்.

(படம்:-சாவகச்சேரி செய்தியாளர்)

## கோபுரம் இதழ் வெளியீடு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான முதல் காலாண்டு கோபுரம் தகவல் இதழ் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழில் திணைக்களச் செயற்பாடுகள் பற்றிய செய்திகளும் ஆன்மீகக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

இலவசமாக விநியோகிக்கப்படும் இவ்விதழை திணைக்களத்திற்கு வந்து நேரில் பெற்றுக் கொள்ள்லாம். தபால் மூலம் பெறவிரும்புவோர் 12X8 அங்குல அளவுள்ள கடிதவுறையில் தமது சுய முகவரியை எழுதி முப்பது ரூபா (30/=) பெறுமதியுடைய முத்திரையை ஒட்டி வேறொரு கடிதவுறையில் வைத்து, பணிப்பாளர், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, கொழும்பு-04 என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இக் கடிதவுறையின் இடதுபக்க மேல்மூலையில் கோபுரம்- இலவச வெளியீடு என எழுதப்பட்டிருத்தல் வேண்டும் எனத் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 100-145 | 100 | 100 | 120-160 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 280 | 300 |
| தக்காளி | 190 | 200 | 190 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 50 |
| கோவா | 140 | 140 | 130 | 160 |
| கரட் | 160 | 180 | 180 | 200 |
| பூசணி | 60 | 70 | 70 | 70 |
| புடோல் | 60 | 80 | 65 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 80-140 | 80 | 120 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 | 100 |
| பாகற்காய் | 160 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 90 | 120 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 140 | 100 | 100 |
| லீக்ஸ் | 70 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 90 | 120 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 160 | 210 | 200 |
| முருங்கைக்காய் | 80-130 | 150 | 280 | 200 |
| போஞ்சி | 180 | 180 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 | 20 |
| தேசிக்காய் | 100-130 | 130 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 10-40 | 30 | 35 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 110 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 50

### சஞ்சீவ் ரோக்



**கொடுமை**
மணமான பெண்ணிற்கு
மாமியார் கொடுமை...!
மணமாகாத பெண்ணிற்கு
வரதட்சணைக் கொடுமை...!
விதவைப் பெண்ணிற்கு
விதியின் கொடுமை...!
காதலிக்கும் பெண்ணிற்கு
காத்திருப்பது கொடுமை...!
அழகான பெண்ணிற்கு
ஆயிரம் கொடுமை...!
அழகில்லாத பெண்ணிற்கு
அத்தனையும் கொடுமை...!

### வினோத் பாலா



### அஜந் குலசிங்கம்




### அற்புதராஜா முகேஷ்ராம்




### கஜன் கஜானி




### கபில் கபிலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தமிழக அரசு இரட்டை வேடம்

## பா.ம.க.செயற்குழு கண்டனம்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான 7 தமிழர்கள் விடுதலையில் தமிழக அரசு இரட்டை வேடம் போடுவதாக பா.ம.க. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, பா.ம.க. தலைமைச் செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், "ராஜவ்காந்தி கொலை வழக்கில் தூக்கு தண் டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரையும் விடுதலை செய்வதற்கான வழிகாட்டுதல்களை உச்சநீதிமன்றம் வழங்கியிருந்தும் அதன்படி செயற்படாமல், அரசியல் இலாபம் தேடும் நோக்குடன் இந்த பிரச்சினையை கையாண்டு பேரறிவாளன், முருகன், சாந்தன் மற்றும் வாழ்நாள் சிறை தண்டனை பெற்ற நளினி, ரவிச்சந்திரன், ஜெயக்குமார்,. ராபர்ட் பயாஸ் ஆகியோரின் விடுதலையை அ.தி.மு.க. அரசு சிக்கலாக்கியது.

இந்த 7 பேரின் விடுதலைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், 7 தமிழர்களின் விடுதலையில் ஆர்வம் கொண்டிருப்பதாக தேர்தலுக்கு முன் நாடகமாடிய தமிழக அரசு, இப்போது தேர்தல்கள் முடிவடைந்து விட்ட நிலையில் நளினியையும், ரவிச்சந்திரனையும் பிணையில் விடுதலை செய்ய உயர் நீதிமன்றத்தில் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது.

அ.தி.மு.க. அரசின் இந்த இரட்டை வேடத்தை கண்டிப்பதுடன் அவர்களை உடனடியாக சிறை விடுப்பில் விடுவிக்கும்படியும் பா.ம.க. செயற்குழு வலியுறுத்துகிறது.

இலங்கையின் தெற்கு மாநிலத்தில் உள்ள அளுத்கம பிரதேசத்தில் இஸ்லாமி யர்கள் அதிகம் வாழும் பகு திகளில் கடுமையான வன்முறையை பொதுபல சேனா என்ற சிங்கள அமைப்பு கட்ட விழ்த்து விட்டிருக்கிறது.

இதற்கு எமது கண்டனங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதன்போது இலங்கை போர்க் குற்ற விசாரணையை சென்னையில் நடத்த அனுமதிக்க வேண்டும், தமிழ் கட்டாயப்பாட சட்டத்தை உறுதியாக செயற்படுத்த வேண்டும. உள்ளிட்ட பலவேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (அ)

# இலங்கைக்கு வராமலே ஐ.நாவின் விசாரணை நடக்கும்

## ஆரம்ப அறிக்கை செப்டெம்பரில் சமர்ப்பிப்பு

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின் போது நடந்ததாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணையின் ஆரம்ப அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனீவா மனிதவுரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித வுரிமை ஆணையாளரின் அலுவலகம் நியமித்துள்ள இந்த விசாரணைக்குழுவினர் தமது விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளனர்.

பிரித்தானிய பிரஜையான சேன்ட்ரா போய்டாஸ் பிரதான இணைப்பாளராக செயற்படும இந்த விசாரணைக்குழுவில் 12 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

கம்போடியாவின் கெமரூஜ் அமைப்பின் போரககுற்றங்கள் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தின் நீதிபதியான நியூசிலாந்தின் காரட் ரைட், சட்ட மருத்துவ நிபுணர்கள், சட்ட வல்லுனர்கள், ஆண் மற்றும் பெண் சமூக நிலை தொடர்பான நிபுணர்கள் உட்பட 12 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யாமலேயே இந்த வசாரணைகளை நடத்த வாய்ப்பிருப்பதாக ஜெனீவா தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# இந்து சமய பொது அறிவு பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை அவ்வவ் மாவட்டங்களில் நடைபெறும் என மேற்படி திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய 2,3 ஆம் வகுப்புக்களுக்கான பரீட்சை அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம்10 மணி வரையும் அதனைத் தொடர்ந்து 4,5,6,7 ஆம் வகுப்புக்களுக்கு காலை 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையும் தொடர்ந்து 8,9,10,11 ஆம் வகுப்புக்களுக்கு மதியம் 12 மணி தொடக்கம் ஒரு மணி வரை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு 011 2554278 அல்லது 071 4402348 ஆகிய தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# ஊடக கற்கையை பாதுகாப்பு அமைச்சு இரத்தாக்கியது ஏன்?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி



(கொழும்பு)

பொது நிகழ்வுகளை பாதுகாப்பு தரப்பு பலாத்காரமாக இரத்துச் செய்வது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அண்மையில் ட்ரான்பரன்சி இன்டர்நசனல் ஏற்பாடு செய்திருந்த தமிழ் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி பட்டறையை இரண்டு தடவைகள் பலாத்காரத்தை பயன்படுத்தி இரத்து செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் ஊடக சுதந்திரம் இருப்பதாக கூறிக்கொண்டு அரசாங்கம் இவ்வாறான செயல்களை செய்து வருவதை அவர் கண்டித்ததுடன் தமிழ் ஊடகவியல்ளாளர்கள் புலனாய்வு ஊடகக்கற்கையை பெற்றுவிடக்கூடாது என்ற அடிப்படையிலேயே இந்த செயல் மேற்கொள்ளப்பட்டதா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வாறான ஊடக கற்கை நெறிகளை இரத்துச் செய்யும் அதிகாரம் குறித்து அவர் பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்களுக்காக நடத்தப்பட்ட இந்த பயிற்சி இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பில் முறைப்பாடுகளை பொலநறுவை பொலிஸார் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதேநேரம் நீர்கொழும்பில் அந்த நிகழ்வு நடத்தப்பட்டபோது பொலிஸார் அதற்கு பாதுகாப்பு வழங்கவில்லை.

இதனையடுத்து குறித்து ஊடகவியலாளர்கள் அழைத்து வரப்பட்டு கொழும்பு கலதாரி ஹோட்டலில் தங்க வைகப்பட்ட போது அங்கும் அவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக ரணில் மேலும் குறிப்பிட்டார். (அ)

இவர்களுக்கு மணமகள் தேவை
கல்யாண மாலை
இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 30 சூரி செவ் 5 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்: MSc / வியாபாரம் (UK – PR)
எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்தானவர்
தொ.இ: B/3283

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
கி.பா: 72.5 செவ் 8 இல்
தகைமை/தொழில்: O/L / பெயின்ரிங் வேலை
தொ.இ: B/3284

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 62.75 செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: O/L /மின் இணைப்பாளர்
தொ.இ: B/3285

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா: 28.25
உயரம்: 6'
தகைமை/தொழில்: O/L / இலத்திரனியல் உபகரணங்கள் திருததுனர்
தொ.இ: B/3286

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: 35.25 உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA (Economics Spl), DBF, Master Degree – Following / வங்கியாளர்
தொ.இ: G/127

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா: 34.25 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/2101

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா: 69 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/2102

பிறப்பு: 1967 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: 43.25 செவ் 1 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: G/2109

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
...யாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நூற்றுக்கு நூறு

ஒரு கிராமத்தில் பாவெல், பியோதர் என்ற இரண்டு பேர் வசித்தார்கள். பாவெலுக்குக் குதிரைகள் மிகவும் பிடிக்கும். உலகத்திலேயே பெரிய செல்வம் குதிரைகள்தான் என்பது அவன் எண்



ணம். ஆனால் இந்த உலகத்தில் மிகப்பெரிய செல்வம் நண்பர்களே என்று சொல்வான் பியோதர். இந்த விடயம் குறித்து இருவருக்கும் அடிக்கடி வாக்குவாதம் நடக்கும். இறுதியில் வெளிநாடுகளுக்குச் சென்று குதிரைகளையும் நண்பர்களையும் சம்பாதிப்பது என்று அவர்கள் முடிபு செய்தார்கள். ஒரு வருட காலம் அவர்கள் வெளிநாடுகளில் சுற்றி அலைந்து குதிரைகளையும் நண்பர்களையும் சம்பாதித்துத் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பினார்கள்.

பாவெல் கேட்டான்; நீ எத்தனை நண்பர்களைச் சந்தித்தாய்?

நான் 99 நண்பர்களைச் சந்தித்தேன் என்ற பியோதர் நீ எத்தனை குதிரைகளைச் சம்பாதித்தாய்? என்று கேட்டான்.

நான் 99 குதிரைகளைச் சம்பாதித்தேன். இன்னும் ஒன்று கிடைத்தால் என்னிடம் 100 குதிரைகள் இருக்கும் என்றான் பாவெல்.

அதைக் கேட்டு பியோதர், ஒரு காரியம் செய்யலாம். என் குதிரையை உனக்குக் கொடுக்கிறேன். அப்போது உன்னிடம் 100 குதிரைகள் இருக்கும் என்றான்.

பாவெலுக்கு மகிழ்ச்சி. அவன் சொன்னான் அப்படி என்றால் நீ சம்பாதித்த 99 நண்பர்களுடன் நானும் சேர்ந்தால் உனக்கு 100 நண்பர்கள் இருப்பார்கள் அல்லவா?

அவன் சொன்னதை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டான் பியோதர். வீட்டுக்குச்சென்றபாவெல், தன் அம்மாவிடம் அம்மா, என் கனவு நினைவாகிவிட்டது. எனக்கு இப்போது சொந்தமாக 100 குதிரைகள் உண்டு என்றான்.

அதைக்கேட்டு அவன் அம்மாவும் மகிழ்ந்தார். அதே நேரம் பியோதரும் தன் அம்மாவிடம் இப்படிச் சொன்னான். அம்மா நான் 100 நண்பர்களைச் சம்பாதித்தேன்.

அதற்கு அம்மா 100 நண்பர்கள் இருப்பது நல்லதுதான். ஆனால், அவர்கள் ஆத்மார்த்தமான நண்பர்களா என்று தெரிந்துகொள்ள வேண்டும்.



அப்படியா?

ஆமாம் நீ இப்போதே சந்தைக்குச் சென்று உன் சொத்துக்களை இழந்துவிட்டாய் என்றும் வாழ்வதற்கு வழி இல்லை என்றும் சொல். அப்போது உன் நண்பர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கலாம்? என்றார்.

பியோதர் தன் அம்மா சொன்னது போலவே செய்தான்.

அதேநேரம் அன்றிரவு பாவெல் வீட்டுக்குத் திருடர்கள் வந்தார்கள்.

அவர்கள் 100 குதிரைகளையும் திருடிச் சென்று விட்டனர். மறுநாள் காலையில் பாவெலுக்கு திருட்டுப்போன விடயம் தெரிந்தது. அவன் பல இடங்களிலும் அலைந்து தேடியும் குதிரைகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்பினான். அம்மா, எனக்கு ஒருநாள் மட்டும் தான் மகிழ்ச்சி கிடைத்தது. இப்போது இந்த உலகத்தில் மிகவும் துயரமானவன் நான்தான் என்று அம்மாவிடம் வருத்தப்பட்டான்.

அதைக்கேட்டு அவன் அம்மாவும் வருந்தினார். இந்த நேரத்தில் பிரியோதரின் வீட்டில் என்ன நடந்தது? அதிகாலையிலேயே பியோதரின் நண்பர்கள் பணமும் உடைகளும் உணவுப்பொருட்களும் எடுத்துக்கொண்டு அவன் வீட்டுக்கு வந்தார்கள். கொண்டுவந்த பொருட்களை பியோதரிடம் கொடுத்து நண்பா, நாங்கள் இருக்கும்போது நீ எதற்கும் கவலைப்பட வேண்டாம். உனக்கு நாங்கள் உதவுகிறோம் என்றார்கள்.

அதைக்கேட்டு மகிழ்ந்தார் பியோதரின் அம்மா. நண்பர்கள் எல்லோரும் விடைபெற்றுச் சென்ற பிறகு அவர் சொன்னார்.

மகனே உனக்கு கிடைத்திருக்கும் நண்பர்கள் எல்லோரும் உண்மையான நண்பர்கள்தான். நீ ஆபத்தில் இருப்பதை அறிந்தவுடன் உதவி செய்ய வந்துவிட்டார்கள். அதன் பிறகுதான் பாவெலின் குதிரைகள் திருட்டுப்போன விடயம் பியோதருக்குத் தெரிந்தது. உடனே அவன் பாவெல் வீட்டுக்குச் சென்றான். தன் நண்பர்கள் கொடுத்த பணத்தையும் மற்ற பொருட்களையும் பாவெலுக்குக் கொடுத்தான்.

நண்பனே, இழந்ததை நினைத்து வருந்தாதே. இவற்றைக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்திரு. நல்ல நண்பர்களைப் பெற்றிருப்பவர்கள் வாழ்க்கையில் எப்போதும் கஷ்டப்பட மாட்டார்கள் என்றான்.

எனக்கு எல்லாம் புரிந்தது. உலகில் உள்ள எந்தச் செல்வத்தையும் விட மேலான செல்வம் நண்பர்கள்தான்! என்றான் பாவெல். பிறகு அவர்கள் ஆழ்ந்த நட்புடன் வெகு காலம் வாழ்ந்தார்கள்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## 06.2014 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1631 - பால்ட்டிமோர் என்ற ஐரிய ஊர் அல்ஜீரிய கடற்கொள்ளைக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டது.
- 1791 - பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னனும் அவனது குடும்பமும் வரெனெஸ் நகருக்குத் தப்பியோடினர்.
- 1837 - விக்டோரியா பிரித்தானியாவின் அரசியாக முடி சூடினார்.
- 1858 - இந்தியச் சிப்பாய்க் கிளர்ச்சி, 1857 முடிவுக்கு வந்தது.
- 1862 - ருமேனியாவின் பிரதமர் பார்பு கட்டார்ஜியூ படுகொலை செய்யப்பட்டார்.
- 1863 - மேற்கு வேர்ஜீனியா ஐக்கிய அமெரிக்காவின் 35 ஆவது மாநிலமாக சேர்க்கப்பட்டது.
- 1877 - அலெக்சாண்டர் கிரகாம்பெல் உலகின் முதலாவது வர்த்தக தொலைபேசிச் சேவையை கனடாவின் ஹமில்டன் நகரில் ஆரம்பித்தார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பிலிபைனஸ் கடல் சமர அமெரிக்கக் கடற்படையின் பெருவெற்றியில் முடிவடைந்தது.
- 1960 - மாலி, செனகல் ஆகிய நாடுகள் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தன.
- 1978 - கிறீசில் 6.5 றிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவானது.
- 1990 - யூரேக்கா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1991 - ஜேர்மனியின் தலைநகரம் பொன்னிலிருந்து பேர்லினுக்கு மீண்டும் மாற்ற பாராளுமன்றத்தில் முடிபு செய்யப்பட்டது.
- 2001 - பாகிஸ்தானின் ஜனாதிபதியாக பெர்வேஸ் முஷாரஃப பதவியேற்றார்.
- 2003 - விக்கிப்பீடியா அமைப்பு உருவானது.

### இறப்புகள்

- 1971 - மகாகவி உருத்திரமூர்த்தி, ஈழத்துக் கவிஞர் (பி. 1927)
- 2005 - ஜாக் கில்பி, அமெரிக்க மின்னியல் பொறியியலாளர் (பி. 1923)
- 2006 - சுரதா, தமிழகக் கவிஞர்

### சிறப்பு நாள்

- உலக அகதிகள் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

**ஐந்தாமிடத்தில் வரும் ராகு! அமைதி நிலவும் வாழ்வு இனி! எல்லோர் மனதிலும் எளிதில் இடம்பிடிக்கும் சாமர்த்தியம் மிக்க இடப இராசி நேயர்களே!**

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

**21.06.2014 - 07.01.2016**



# இடபம்



# ஐந்தாமிடத்தில் வரும் ராகு! அமைதி நிலவும் வாழ்வு இனி!

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

சந்திரன் உச்சம் பெறுவது உங்கள் இராசியில்தான் என்பதால் சிந்தனைவளம் மிக்கவர்களாக விளங்குவீர்கள். வந்தனை செய்யும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புவீர்கள். மந்தன் எனப்படும் சனி உங்களுக்கு யோகம் செய்யும் கிரகமாகும். அள்ளிக் கொடுக்கும் சுக்ரனின் ஆதிக்கம் பெற்றவர்கள் நீங்கள். சுக்ரன் உங்கள் இராசிக்கு அதிபதி என்பதால் சொல்லும் சொற்களெல்லாம் வெல்லும் சொற்களாக அமையும்.

ஓய்ந்திருப்பது உங்களுக்குப் பிடிக்காது. ஆய்ந்து அறிந்து செயற்பட்டு அடிபணிய வேண்டிய நேரத்தில் அடிபணிந்து, ஆதிக்கம், அதிகாரம் செய்ய வேண்டிய நேரத்தில் அதிகாரம் செய்து எண்ணிய க்ாரியத்தை முடிப்பீர்கள்.

வருமானமே வாழ்க்கைக்குத் தேவை என்பதை உணர்ந்து கொண்டு வாய்ப்புக்களை எல்லாம் உபயோகப்படுத்திக்கொள்வீர்கள். அவசரத்திற்கு கைகொடுக்கும் ஆத்மார்த்த நண்பர்கள் பலரும் உங்களுக்கு உண்டு. இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு- கேது பெயர்ச்சி எப்படி எல்லாம் மாற்றத்தை வழங்கப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**பிள்ளைகள் வழியில் நல்ல நகவல்களைத் தரும் கன்னி ராகு!**

இதுவரை துலாம் இராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மேட இராசியில் சஞ்சரித்த கேதுவும், 21.06.2014 அன்று பின்னோக்கிச் சென்று உங்களுக்கு பிரபல்ய யோகத்தை வழங்கப்போகிறார்கள். இக்காலம் ஒரு பொற்காலமென்றே சொல்லலாம். தடம் மாறாத வாழ்க்கைக்கு அஸ்திபாரமிடும் நேரமிது. தனவரவு எதிர்பார்த்த இடத்திலிருந்து கிடைக்கும். கடன்மேல் கடன் என்றிருந்த நிலை மாறி இனி கனிவான வாழ்க்கையும் அமையும்.

ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகு அனைத்து தடைகளையும் நீக்கும் என்பதில் ஐயமில்லை. பிள்ளைகள் வழியில் எடுக்கும் பெரும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இடமாற்றச் சிந்தனைகள் வெற்றிபெறும். இல்லம் கட்டுவதிலிருந்த தடைகள் அகலும்.

பொதுவாக உங்களுக்கென்று இருக்கும் சுய ஜாதகத்திலும், உங்கள் குடும்ப உறுப்பினர்களின் ஜாதகத்திலும் ராகு யாருடைய சாரத்தில் இருக்கிறார் என்பதை அறிந்து வைத்துக்கொண்டு அதற்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று சர்ப்ப சாந்தி பரிகாரங்களைச் செய்தால் அற்புத பலன்கள் அடுக்கடுக்காக நடைபெறும்.

இந்தமுறை ராகு 5 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் சுப விரயம் செய்ய வேண்டிய நேரமாக மாற்றிக்கொள்ளலாம். பிள்ளைகள் வழியில் இதுவரை எடுத்த எந்த முயற்சியும் நடைபெறவில்லையே என்ற ஏக்கத்தில் இருந்தவர்கள் இப்பொழுது மகிழ்ச்சிக் கடலில் திளைக்கப் போகிறார்கள். குழந்தைகளின் சம்பாத்தியத்தால் கூடுதல் வருமானம் கிடைக்கும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். பஞ்சம ஸ்தான ராகு பலம் பெறும் இந்த நேரத்தில் பிள்ளைகளின் திருமணக் கனவை நனவாக்க முயற்சிப்பீர்கள். கடல்தாண்டிச்சென்று அவுஸ்திரேலியா, அமெரிக்கா, லண்டன் போன்ற அந்நிய நாட்டில் படிக்க வைத்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்த பெற்றோர்களுக்கு எண்ணியபடியே ஸ்கொலர்சிப் கிடைத்து எளிதில் செல்லும் வாய்ப்பும் கிடைக்கும்.

**பணவரவைக் கூட்டும் பதினொராமிடத்து கேது!**

பதினொராம் இடத்தில் கேது சஞ்சரிப்பது யோகம்தான். லாபஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே, பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர். ஞானகாரகன் கேது லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

தற்சமயம் பெயர்ச்சியாகும் கேது, குரு வீட்டில் சஞ்சரிப்பதால் நீங்கள் எதிர்பார்த்த நற்பலன்களை எதிர்பார்த்தபடியே பெற முடியும். அதுமட்டுமல்ல குருவின் பார்வையும் கேதுவின் மீது பதிகிறது. பணவரவு திருப்திகரமாக இருக்கும். பாக்கிகளும் வசூலாகி பரவசப்படுத்தும். வள்ளல்களும் வங்கிகளும் போட்டி போட்டுக்கொண்டு உதவுவர்.

வட்டிக்கு மேல் வட்டி கட்டி வாங்கிய கடனை திருப்பிக்கொடுக்க முடியாமல் தவித்தவர்கள் இக்காலத்தில் நிம்மதிப்பெருமூச்சு விட நிழற் கிரகங்களின் ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கும். கேது என்ற இரண்டு எழுத்து கேள்விக்குறியாக இருந்த உங்கள் வாழ்க்கையை ஆச்சரியக்குறியாக மாற்றப் போகிறது. அடுத்தவர்களுக்காக உழைத்து உழைத்து ஆதாயம் இல்லையே என்று நினைத்தவர்களுக்கு இனி போதுமான ஆதாயம் பொழுதெல்லாம் கிடைக்கப் போகிறது.

உத்தியோகம் மற்றும் தொழிலில் ஏற்பட்ட பற்றாக்குறை பட்ஜெட் அகலும். வீடு வாகன வசதிகளைப் பெருக்கிக்கொள்ள முன்வருவர். வெளிநாட்டு அனுகூலமுண்டு. அந்நிய தேசத்தில் உள்ள நண்பர்கள் உங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட 'முன்வருவர். எனவே, எண்ணிய காரியங்கள் எதைச் செய்ய வேண்டுமானால் தொலைபேசி எண்ணைச் சுழற்றினால் போதும்; கண்ணெதிரே வாய்ப்புகள் கைகூடி வந்து நிற்கும்.

பழைய வாகனங்கள் பழுதாகிறதே என்று கவலைப்படுபவர்கள், நூதன கருவிகள் பொருந்திய அழகிய வாகனங்களை வாங்கி மகிழ்ச்சி காண்பர். ஆடம்பரச்செலவுகள் அதிகரிக்கும்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

ஐந்தாமிடத்து ராகு அதிர்ஷ்டத்தை அள்ளித்தரவும் பதினொராம் இடத்து கேது பண வரவைப்பெருக்கிக்கொடுக்கவும் வெள்ளிக் கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்களின் சார பலமறிந்து பரிகாரங்களைச் செய்வதோடு பாம்புநாதர், வண்டார்குழலி அம்மனை வழிபட்டு வந்தால் வசந்தகாலம் உருவாகும்.

**பாதசாரப்படி ராகு-கேது தரும் பலன்கள்!**

**ராகு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (21.06.2014 முதல் 24.10.2014 வரை)**

விரயங்கள் கூடுதலாக இருக்கும். வெளிவட்டாரப்பழக்க வழக்கம் விரிவடையும். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. வீடு கட்டும் முயற்சியில் அல்லது வீடு வாங்கும் முயற்சியில் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

**ராகு, சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (25.10.2014 முதல் 01.07.2015வரை)**

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள். செல்வாக்கு மேலோங்கும். வெளிநாட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கடல் வணிகம் செய்பவர்கள் ஆதாயம் காண்பர். தொழில் சீராக இருக்கும்.

**ராகு, சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (02.07.2015 முதல் 07.01.2016 வரை)**

வீட்டுக்குத்தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப்பொருட்கள் வரை வாங்கிச்சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் மூத்தவர்களால் சில பிரச்சினைகள் உருவாகலாம். அப்போது திசாபுத்திக்கேற்ற தெய்வத்தைத் தேர்ந்தெடுத்து அர்ச்சனைகள் செய்தால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது.

**கேது, புதன் காலில் சஞ்சரிக்கும்பொழுது (21.06.2014 முதல் 25.06.2015 வரை)**

பொருளாதார நிலை உயரும். செல்வாக்கு மேலோங்கும். புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி காண்பீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பப் பிரச்சினை கள் நல்ல முடிவிற்கு வரும். குழந்தைகளின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

**கேது, சனி சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (26.02.2015 முதல் 04.11.2015 வரை)**

தொழில் வளம் மேலோங்கும். வியாபார விரோதங்கள் விலகும். கிளைத் தொழில் தொடங்க முன்வருவீர்கள். போட்டி பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்துகொண்டேயிருக்கும்.

**கேது, குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (05.11.2015 முதல் 07.01.2016 வரை)**

வரவறிந்து செலவு செய்வது நல்லது. வாய்ப்புக்களை உபயோகப்படுத்திக்கொள்ள முடியாமல் தடுமாறுவீர்கள். இலாபம் வந்தாலும், வந்த மறுநிமிடமே செலவாகிவிடும். கிழக்குநோக்கிய குரு வழிபாடும், வடக்கு நோக்கிய விநாயகர் வழிபாடும் வளர்ச்சியைக் கூட்டும்.

**சனி, குரு மாற்றங்கள் தரும் பலன்கள்**

16.12.2014 விருச்சிக இராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். சப்தம ஸ்தானத்தில் உங்கள் இராசிப்படி சனி சஞ்சரிப்பதால் இதைக் கண்டகச் சனி என்று சொல்வார். இருந்தாலும் சனி உங்களுக்கு யோகம் தரும் கிரகம் என்பதால் வாய்ப்புகள் வந்து கொண்டேயிருக்கும். ஆனால், அதை உபயோகப்படுத்திக்கொள்வதில் சில பிரச்சினைகள் உருவாகலாம். சேர்க்கை சேர்ந்த நண்பர்களால் சிக்கல்கள் ஏற்படும். செலவுகள் கூடுதலாக இருக்கும். ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடி ஏற்படலாம். மருத்துவச்செலவுகள் அதிகரிக்கும். அசையாச் சொத்துக்களில் முதலீடு செய்ய அனுகூலமான நேரமிது.

**குருப்பெயர்ச்சி!**

ராகு- கேது பெயர்ச்சிக்கு முன்னதாகவே குரு பெயர்ச்சியாகிவிட்டது. கடகத்தில் உச்சம் பெற்ற குரு சர்ப்ப கிரகமான கேதுவைப் பார்ப்பதால் கெடு பலன்கள் மாறி நற்பலன்கள் வந்துசேரும். அஞ்சல்வழி அனுகூலத் தகவல்கள் உண்டு. அருகில் இருப்பவர்களின் ஆதரவு கூடும். தொழில் போட்டிகள் அகலும். மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர். சாதாரண முயற்சிகள் கூட வெற்றிபெறும். முக்கிய புள்ளிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பர்.

05.07.2015 இல் சிம்ம இராசியில் குரு சஞ்சரித்த பின்னால் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தையும் 8 ஆம் இடத்தையும் குரு பார்க்கப்போகிறார். எனவே, இலக்குகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிட்டும். உழைப்பிற்கேற்ற பலன் வந்துசேரும். இனம் புரியாத கவலை அகலும். ஈடுபட்ட துறைகள் எதுவாக இருந்தாலும் அது வளர்ச்சிப்பாதையை நோக்கிச்செல்லும்.

**நாளை மிதுனம்...**

அன்பு வாசகர்களே,

தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்த ஸ்வாமி எழுதிய என் ஜோதிடம், ராகு-கேதுப் பெயர்ச்சி பலன்கள் முடிந்ததும் தொடர்ந்து வலம்புரியில் வெளிவரும்.

-ஆ.ர்.-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களை பாதுகாக்க இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்

## கருணாநிதி அறிக்கை



(சென்னை)

இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களைப் பாதுகாக்க இந்திய மத்திய, மாநில அரசுகள் குரல் கொடுக்க முன்வர வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை வெள்ளையரிடமிருந்து பெற்றுக்கொண்ட நாள் முதலாக, பெரும்பான்மைச் சிங்களவர், அரசியல் சட்ட நெறிமுறைகளின்படி சிறுபான்மையினரான தமிழர்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர் ஆகியோருக்கு உரிய பாதுகாப்பளித்து அரவணைத்து ஆட்சி செலுத்துவதற்குப் பதிலாக, அவர்களுக்கெதிரான மோதல் போக்கினையே தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்கள்.

இலங்கை அரசின் இத்தகைய மோதல் போக்கின் காரணமாகவே, இலங்கையில் சிறுபான்மை மக்களாக உள்ள தமிழர்களைத் தாக்கிச் சின்னாபின்னப்படுத்திய சிங்களவர்கள், கடந்த சில நாட்களாக மற்றொரு சிறுபான்மைப பகுதியினரான முஸ்லிம்கள், அவர்கள் தமிழ் பேசுபவர்கள் என்பதால் அவர்களையும தாக்கத் தொடங்கியுள்ளார்கள்.

கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையிலும், இந்த இரு பிரிவினருக்கும் இடையே அடிக்கடி வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் இதுவரை தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தி, இனப்படுகொலை நடத்தி முடித்ததை அடுத்து இஸ்லாமியர்களும் கடுமையாகத் தாக்கப்படுகின்ற நிலையில் அவர்களைப் பாதுகாக்கும் வகையில் இங்கேயுள்ள மத்திய, மாநில அரசுகள் குரல் கொடுக்க முன்வர வேண்டும் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கையில் இல்லை

## இந்தியாவுக்கு அறிவித்தது இலங்கை

இலங்கையில், பாகிஸ்தான் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் எதுவும் கிடையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அண்மையில் இலங்கையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் செயற்பட்டு வருவதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணை நடத்தியதாகவும் இவ்வாறான தீவிரவாதக் குழுக்கள் இலங்கையில் செயற்படவில்லை எனவும் பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்துள்ளனர். இது தொடர்பில் இலங்கை அரசாங்கம், இந்திய மத்திய அரசாங்கத்திற்கும் அறிவித்துள்ளது.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்த போது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தொடர்பில் வினவியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இலங்கையில் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் எதுவும் கிடையாது என இலங்கை பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை, 75 பாகிஸ்தான் பிரஜைகள் அண்மையில் நாடு கடத்தப்பட்டுள் ளனர். உரிய விசா அனுமதிப்பத்திரமின்றி நாட்டுக்குள் தங்கியிருந்தவர்களே இவ்வாறு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

30 நாட்கள் சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் பிரவேசிக்கும் பாகிஸ்தானியர்கள் ஹோட்டல்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தொழில் புரிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# அமெ.கைப்பொம்மையாக ஐக்கிய நாடுகள் அமைப்பு

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் அமைப்பு அமெரிக்காவின் கைப்பொம்மையாக செயற்பட்டு வருவதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் இன்று ஐக்கிய நாடுகள் அமைப்பினையும் அதன் நடவடிக்கைகளையும் போற்றி புகழ்ந்து பாடி வருகின்றது.

குறை அபிவிருத்தி நாடுகளை அபிவிருத்தி நோக்கி இட்டுச் செல்லும் நோக்கிலேயே ஐக்கிய நாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் செய்யப்பட்ட பிரகடனங்கள், இணக்கப்பாடுகள் தற்போது உதாசீனம் செய்யப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் அமைப்பு அமெரிக்காவின் கைப்பொம்மையாக செயற்படுகினறது. அமெரிக்காவின் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள ஏனைய நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தி வருகின்றது.

இதற்கு நாம் இடமளிக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# முஸ்லிம்களின் பிரச்சினைகள் சர்வதேசத்தின் கவனத்திற்கு

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து சர்வதேச சமூகத்திடம் முறைப்பாடு செய்ய நேரிடும் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் தொடர்ச்சியாக துன்புறுத்தப்பட்டால் அதுபற்றி இராஜதந்திரிகளின் ஊடாக சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்ல நேரிடும்.

அரசாங்கத்தை விட்டு விலகி அழுத்தங்களை ஏற்படுத்துவதனை விடவும் அரசாங்கத்தில் இருந்து கொண்டு அழுத்தங்களை பிரயோகிக்க முடியும்.

பதவியை துறப்பதன் மூலம், பதவி விலகாமல் இருப்பதனை விடவும் நன்மைகள் ஏற்படும் என எவரேனும் நிரூபித்தால் உடனடியாக பதவி விலகத்தயார்.

அளுத்கம பிரதேசத்தில் இடம் பெற்ற வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படும் வரையில் நாம் காத்திருக்கின்றோம்.

மத நல்லிணக்கம் மற்றும் சிறுபான்மை மக்களின் நிலைமைகள் குறித்து ஆராயும் சர்வதேச பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

இந்தப் பிரதிநிதிகள் குழு நீண்ட காலமாக இலங்கைக்கு விஜயம் செய்ய கோரிக்கை விடுத்து வரப்படுகின்றது.

நாட்டின் பிரச்சினைகளுக்கு உள்ளூரில் தீர்வுகாண முடியாவிட்டால் வெளிநாடுகளின் உதவியை நாடுவதில் தவறில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

# விஜித தேரர் மீது தாக்குதல்

(கொழும்பு)

தேசிய பலசேனா அமைப்பின் தலைவர் வட்டரக்க விஜித தேரர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

இனந்தெரியாத நபர்கள் விஜித தேரரை கடத்திச் சென்று தாக்கியுள்ளனர்.

பாணந்துறை ஹிரனம பாலத்திற்கு அருகாமையில் விஜித தேரர் கை,கால்கள் கட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் தேரரிடம் தற்போது வாக்கு மூலம் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)



தியாகி அறக்கொடை நிறுவனத்தினூடாக ஐந்து இலட்சம் ரூபா நிதி பங்களிப்புடன் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றல்வள நிலையம் அண்மையில் நிறுவனத்தின் தாயார் வாமதேவா சொர்ணாம்பிகையினால் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைப்பதையும் அருகில் ஸ்தாபகரின் தாயார் வாமதேவா சொர்ணாம்பிகை நிற்பதையும் படங்களில் காணலாம்.

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது

## விஜயதாச எம்.பி.தெரிவிப்பு

சர்வதேச சமூகத்தை வெறுமனே விமர்சனம் செய்வதில் பயனில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர் வெற்றி கொள்ளப்பட்ட போதிலும் சர்வதேச சமூகத்தை வெற்றி கொள்ள அரசாங்கம் தவறி யுள்ளது.

ஆளும் கட்சியின் அமைச்சர்கள் பொறுப்புணர்ச்சியற்ற வகையில் சர்வதேசத்தை விமர்சனம் செய்கின்றனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.

தாருஸ்மன் அறிக்கை குறித்து திருப்தி அடைய முடியாது. அரசாங்கத்திற்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 6 குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளன.

வெளிவிவகார சேவை பலவீனமடைந்துள்ளது. வெளிவிவகார சேவையில் உறவினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. விசாரணைக்குழுவினை நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது என்ற தீர்மானத்தை பிரதமரோ, வெளிவிவகார அமைச்சரோ ஏன் கொண்டு வராமல், புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்தனர்?

போரின் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக அரசாங்கம் அறிவித்த போதிலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் எதுவும் செய்யவில்லை.

அரசாங்கம் இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படுகின்றது.

எதிர்கால தேர்தல்களின் போது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு முஸ்லிம் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# அரச தரப்பின் ஆதரவோடு அளுத்கமவில் தாக்குதல்

## பு.ஜ.மா.லெனினிசக் கட்சி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலங்களில் முஸ்லிம் மக்களுக்கும் அவர்களது பள்ளி வாசல்களுக்கும் எதிராகப் பேரின வாதிகளும் பௌத்த மத அடிப்படை வாதிகளும் மேற்கொண்டு வந்த மிக மோசமான பிரசாரங்களினதும் நடவடிக்கைகளினதும் ஒரு பகுதியாகவே அளுத்கம முஸ்லிம் மக்கள் மீதான வெறித்தனத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன என புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் அரசி [illegible] சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என் போருக்கு எதிரான திட்டமிட்ட பேரினவாத வன்செயல்களும் கொலைகளும் எரியூட்டல்களும் புதியவைகள் அல்ல.

1915 இல் முஸ்லிம் மக்கள் மீதான முதலாவது பேரினவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று அடுத்த வருடம் நூறு ஆண்டுகள் ஆகப் போகின்றன.

இச்சூழலிலேயே அளுத்கம முஸ்லிம் மக்கள் மீதான கோரத்தனமான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இவற்றுக்கு பின்னால் அரச தரப்பின் உயர் புள்ளிகளின் ஆதரவோடு இயங்கிவரும் பொதுபல சேனா இருந்து வருவது எல்லோரும் அறிந்ததாகும்.

தொடர்ந்து பாதிக்கப்படுவோர்கள் சாதாரண உழைக்கும் மக்களாகவே இருக்கிறார்கள்.

எனவே, உழைக்கும் மக்கள் என்ற அடிப்படையில் அனைத்து மக்களும் சிந்தித்து செயற்படுவதன் மூலமே இன, மத அடிப்படை வாதிகளையும் அரசியல் இலாபம் பெறுவோரையும் அடையாளம், கண்டு நிராகரித்து முன்னோக்கிச் செல்ல முடியும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

75

...எங்கள் வீட்டில் ஒரு வாள் இருந்தது.

அந்த என் பத்து வயதில் என்னை விட இரண்டு மடங்கு உயரமான பட்டாக்கத்தி அது.

அதைத் தூக்குவதற்கே தோளுரம் வேண்டும்.

அடுக்குப் பானைகளுக்குப் பின்னால் மூலையில் சாத்தி வைக்கப்பட்டிருந்த அந்த வீர ஆபரணத்தை நான் தொட்டுப் பார்ப்பேன்; தடவிப் பார்ப்பேன்; சுகிப்பேன்.

அந்த உறையை லேசாய் உருவிப் பார்ப்பேன்.

என்னை ஒரு கரிகாற்சோழனாய்க் கனவு வளர்ப்பேன்.

அந்த வயதில் அந்த வாளோடு நான் வாழ்ந்தேன்.

அந்த வாளை அவர் விற்றுவிட்டார்.

நான் இடி விழுந்த மண் பானையாய் நொறுங்கிப் போனேன்.

என்னால் சொல்லி அழ முடியவில்லை.

என் சோகத்தை யாருக்கும் புரிந்து கொள்ளத் தெரியவில்லை.

அவள் வீடு தேடி நான் ஓடினேன்.

கலங்கிய என் கண் பார்த்து அவள் தன் கண்களில் காட்டிய அதிர்ச்சி, என் இதயத்தின் மறக்க முடியாத பாகத்தில் பதிவாகியிருக்கிறது.

"ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாள்.

பொய் சொல்லத் தெரியாத வயசு. புலம்பித் தீர்த்தேன்.

அப்படியே என்னைத் தன் மார்பில் புதைத்துக் கொண்டு முந்தானை எடுத்து முகம் துடைத்தாள்.

அந்த நிமிடத்தில் அது எனக்கு ரொம்ப இதமாக இருந்தது.

இப்போது மீண்டும் நினைவுகளின் தூசு தட்டித் துடைத்துப் பார்க்கிறேன்.

அந்த இதத்திற்கு என்ன காரணம்?

அவள் அந்த நிமிடத்தில் காண்பித்த அன்பின் நிஜமா? அல்லது எனக்குத் தெரியாமல் எனக்குள் பரவிய இளஞ்சூடா?

இரண்டுமாகக் கூட இருக்கலாம்.

ஊரில் அங்கங்கே சிறுசிறு கூட்டங்கள்.




கசமுசாக்கள்.

என் காதுக்கு அறிமுகமாகாத சில கசப்பு வார்த்தைகள்.

அவள் குடும்பம் ஊரை விட்டுப் போய்விட வேண்டும் என்று ஒருமனதான தீர்மானம்.

எனக்கு விளங்கவில்லை.

ஏன் என்று தெரியவில்லை.

சில நாட்களாய் அவளை நான் பார்க்கவில்லை.

ஒருநாள் பள்ளிக்கூடம் முடிந்து புத்தகச் சுமையோடு ஆடிக் காற்றை எதிர்த்து எங்கள் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன்.


அவள் வீட்டு வாசல் வெறிச்சோடி கிடக்கிறது.

விசாரிக்கிறேன்.

அவர்கள் வீட்டைக் காலி செய்துவிட்டு, அப்போதுதான் குதிரை வண்டியில் புறப்பட்டுப் போனார்கள் என்று பெட்டிக்கடைப் பெருசு தகவல் தருகிறார்.

தோளில் புத்தகப்பையும், மனசில் சோகமும் கனக்கக் கனக்க ஓடுகிறேன்.

குதிரை வண்டி ஸ்டாண்டில் வந்து



மூச்சிரைக்கும் குதிரையாய்ப் பேச்சிழந்து நிற்கிறேன்.

அவர்கள் போய்விட்டார்கள்.

போயே போய்விட்டார்கள்.

அன்று நான் உகுத்த கண்ணீர்த் துளிகளில் அந்தக் குதிரை வண்டி ஸ்டாண்டின் புழுதி அடங்கியிருக்கலாம்; மனசுக்குள் அடித்த புயல் அடங்குமா?

இன்று அவள் இருந்தால்- வாழ்வின் பாதியைத் தொட்டுக் கொண்டிருக்கலாம்.

இறந்திருந்தால்-அவளின் புதைகுழியில் புல் முளைத்திருக்கலாம்.

ஆனால் எனக்குள் அவள் பூக்கவைத்த பூக்கள் மட்டும் வாடா மலர்களாய், சூடா மலர்களாய் ரகசியமாய் சுகந்தம் பரப்பிக் கொண்டேயிருக்கின்றன.

அவளைப் போல் வாழ்க்கையில் சிரச்சேதம் செய்யப்பட்ட ஜீவன்கள் எத்தனையோ?

என் அனுபவத்தைப் போல் ஒவ்வொருவரின் காலடிகளுக்குக் கீழே வழிந்துபோன வாழ்க்கைகள் எத்தனையோ?

(தொடரும்)

-வைரமுத்து -

# இலங்கை மீதான சர்வதேச விசாரணையை இந்திய மத்தியரசு ஆதரிக்க வேண்டும்

## நாம் தமிழர் கட்சி வலியுறுத்து

(சென்னை)

இலங்கையின் தென்பகுதியில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் நகரங்களில் இஸ்லாமிய மக்கள் மீது பௌத்த சிங்கள இனவெறியாளர்கள் நடத்திவருவது, இரு மதப் பிரிவினைரிடையிலான மோதல், கலவரம் என்று கூறப்படுவது உண்மையல்ல, இது தமிழினத்தை அழித்தொழிக்கும் சிங்கள இனவாத அரசின் ஆதரவுடன் தொடரும் தமிழின அழிப்பே என்று நாம் தமிழர் கட்சி திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை பகுதியிலுள்ள அளுத்கம, பேருவளை ஆகிய இடங்களில் இஸ்லாமிய மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறையில் 80 இற்கும் அதிகமான இஸ்லாமியர்களே படுகாயமுற்றுள்ளனர் என்பது மட்டுமன்றி, ஒரு தீ வைப்பு தாக்குதலில் மட்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 இஸ்லாமியர் கொல்லப்பட்டுள்ளனர் என்பதும், இஸ்லாமியர்களுக்குச் சொந்தமான 40 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டிருப்பதும் இது இஸ்லாமியர்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட வன்முறை என்பது புலனாகிறது.

சிங்கள பௌத்த அமைப்பான பொதுபல சேனா என்ற அமைப்பு இந்த வன்முறை வெறியாட்டத்தை நடத்தியுள்ளது.


இலங்கையின் வட, கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை வெறியாட்டம் போலவே இப்போதும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

சிங்கள அரசின் துணையுடன் நடக்கும் இந்த வன்முறை வெறியாட்டத்தைக் கண்டித்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாம் தமிழர் கட்சி சென்னையில் மாபெரும் போராட்டத்தை நடத்தவுள்ளது.

2009 ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் வந்து முடிந்த தமிழின அழிப்பிற்குப் பின்னர், அடுத்த இலக்காக தமிழ் பேசும் இஸ்லாமிய மக்கள் குறிவைக்கப்பட்டனர்.

தனது சொந்த நாட்டு மக்களின் மீதே போரை அறிவித்து, அதில் நாடுகளுக்கு இடையிலான போரில் கூட பயன்படுத்தக்கூடாது என்று தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளையும், வெள்ளை பொஸ்பரஸ் போன்ற இரசாயன குண்டுகளையும் வீசி தமிழினத்தை அழித்தொழித்தது ராஜபக்ஷ தலைமையிலான அரசு.

அந்த போரை "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" என்று கூறி,



தெற்காசிய வல்லாதிக்கங்களின் ஆதரவைப் பெற்று தமிழின அழிப்பை நடத்தி முடித்தது. ஆனால், இப்படிப்பட்ட ஒரு அரசை, ஒரு ஜனநாயக அரசு என்று கூறி, இந்தியாவும் உலக நாடுகளும் மதித்துப் போற்றி வருவதுதான் வினோதமாகும்.

இலங்கையை சிங்கள பௌத்த நாடாக மாற்றவே, முதலில் தமிழின அழிப்பையும், இப்போது தமிழ் பேசும் முஸ்லிம் மக்களையும் சிங்கள பௌத்த அரசு அழித்தொழிக்கத் தொடங்கியுள்ளது. சிங்கள அரசின் இந்த கொடூர திட்டத்தை, அதன் தமிழின அழித்தலுக்கு ஆதரவு தந்து துணை போன பாகிஸ்தான், ஈரான் உள்ளிட்ட இஸ்லாமிய அரசுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட அரசின் தலைவரைத் தான் பிரதமர் பதவியேற்புக்கு அழைத்தோமா என்பதை பிரதமர் நரேந்திர மோடியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த அரசுதான் தமிழ்நாட்டின் மீனவர்கள் 600 பேரை இதுவரை கொன்று குவித்துள்ளது என்பதையும், இன்றளவும் தாக்கி காயப்படுத்தி வருகிறது என்பதையும் சீர்தூக்கிப்பார்த்து, இலங்கை எப்படி இந்தியாவிற்கு நட்பு நாடாக இருக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இலங்கை அரசின் இப்படிப்பட்ட இனவெறியாட்டங்களை தடுத்து நிறுத்த ஒரே வழி, அந்நாடு நடத்தி முடித்த தமிழின அழித்தலை வெளிக்கொணர ஐ.நா. மனித வுரிமை மன்றம் நடத்தவுள்ள சர்வதேச விசாரணைக்கு, இந்திய மதத்திய அரசு ஆதரவளிக்க வேண்டும்

இதற்கு மேலும் இலங்கை அரசை ஒரு ஜனநாயக அரசு என்றும், அதனை நட்பு நாடு என்றும் இந்தியா பேசுமானால், ஒரு ஜனநாயக நாடு என்கிற அதன் பெருமை, சர்வதேச நாடுகளுக்கிடையே ஐயத்திற்கிடமாகிவிடும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அனோமாவுக்கு எதிராக பெண் கொடுமை முறைப்பாடு

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி அனோமா திஸாநாயக்கவிற்கு எதிராக பெண் கொடுமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெண் ஒருவரை, அனோமா திஸாநாயக்க துன்புறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிறுவர் அதிகாரசபையின் கணக்காய்வு பிரிவு பெண் பணியாளர் ஒருவரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

காரியாலயத்திற்குள் தமக்கு பல்வேறு வழிகளில் அழுத்தங்களை பிரயோகித்து வருதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளதுடன்இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் அமெரிக்கா செய்தது என்ன...?

**அமெரிக்காவின் ஈராக் நடவடிக்கைகள் குறித்த இரகசியங்களை வெளியிட்டவர் மனம் திறக்கிறார்...!**

"ஈராக்கில் அமெரிக்கா நடத்திய போர் குறித்த இரகசிய ஆவணங்களை வெளியிடுவதென்று 2010 இல் நான் தீர்மானித்தேன். நாட்டின் மீதுள்ள பற்றினாலும் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை குறித்த உணர்வாலும்தான், நான் அந்த முடிபுக்கு வந்தேன். அதற்காக 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று தற்போதும் சிறையில் இருக்கிறேன்.

மார்ச் 2010 இல் ஈராக்கில் நடைபெற்ற தேர்தல்கள் குறித்த செய்திகளை நீங்கள் தொடர்ந்து படித்திருந்தீர்களானால், ஒரு விடயம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஈராக் தேர்தல் என்பது பெரும்வெற்றி என்று தெரிவிக்கும் செய்திகள் அமெரிக்கப் பத்திரிகைகளில் ஆக்கிரமித்திருந்தன. கூடவே வாக்களித்துவிட்டு ·மை விரலைப்பெருமையாகக் காட்டியவாறு நிற்கும் ஈராக் பெண்கள், அவர்களின் அனுபவக்கதைகள் என்று அமெரிக்கப்பத்திரிகைகள் நிரம்பி வழிந்தன. இதன் மூலம் எல்லோருக்கும் உணர்த்தப்படுவது என்னவென்றால், அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் நிலையான ஜனநாயக ஈராக்கை நிறுவுவதில் வெற்றிபெற்றிருக்கின்றன என்பதுதான்.

ஆனால், ஈராக்கிலிருந்த நாங்கள் இந்த விடயத்தில் மேலும் சிக்கலான பரிமாணங்களை அறிந்திருந்தோம்.

**ஈராக் அரசும் அமெரிக்க ஊடகங்களும்**

இராணுவ ரீதியான மற்றும் தூதரக ரீதியான அறிக்கைகள் எனது மேசைக்கு வந்தவண்ணம் இருந்தன. அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்காக ஈராக்கின் உள்துறை அமைச்சகமும் மாகாணக் காவற்றுறையும் மேற்கொண்ட கொடூர நடவடிக்கை ஒன்றைப்பற்றியவைதான் அந்த அறிக்கைகள்.

சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் சித்ரவதை செய்யப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். அந்த ஆண்டின் தொடக்கத்தில் மாகாணக் காவற்றுறையால் கைது செய்யப்பட்ட 15 பேரை விசாரிக்கும்படி எனக்கு ஆணைகள் வந்தன. அவர்களுக்கும் பயங்கரவாதத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை நான் அறிந்துகொண்டேன். அவர்கள் செய்ததெல்லாம் ஈராக் பிரதமர் மாலிகியின் நிர்வாகத்தைப்பற்றிய ஆய்வுபூர்வமான விமர்சனம் ஒன்றை வெளியிட்டதுதான்.

நான் கண்டுபிடித்த உண்மையைப் பற்றிய அறிக்கையை கிழக்கு பாக்தாதிலிருந்த உயரதிகாரிக்கு அனுப்பி வைத்தேன். தேவையில்லாத தகவல் இது என்றும் இதற்குப் பதிலாக ஈராக் அரசுக்கு எதிராக செயற்படும் அச்சகங்களைக் கண்டுபிடிப்பதில் மாகாண காவற்றுறைக்கு நான் உதவ வேண்டும் என்றும் எனக்கு அறிவுறுத்தினார்.

ஈராக் தேர்தலின்போது நடந்த முறைகேடுகளிலும் ஊழல்களிலும் நமது அமெரிக்க இராணுவத்திற்கு இருந்த பங்கை அறிந்து நான் அதிர்ந்துபோனேன். ஆனால், நம்மை மிகவும் சங்கடப்படுத்தும் இதுபோன்ற தகவல்கள் எல்லாம் அமெரிக்க ஊடகங்களின் கண்களுக்குச் சிக்காமலேயே போய்விட்டன.

**அமெரிக்க மக்களுக்கு என்ன தெரியும்?**

அமெரிக்காவில் வெளியாகும் செய்திகளையும் எனக்கு ஈராக்கில் கிடைக்கும் இராணுவ தூதரக அறிக்கைகளையும் ஒப்பிட்டுப்பார்ப்பது எனது தினசரி வேலைகளில் ஒன்று. இப்படி ஒப்பிட்டுப் பார்க்கப் பார்க்க இரண்டுக்குமிடையில் எவ்வளவு வேறுபாடுகள் இருக்கின்றன என்பது எனக்கு மேலும் மேலும் தெளிவானது.

மக்களுக்குக் கிடைத்ததெல்லாம், பொய்யும் அரைகுறைத் தகவல்களும்தான்.

**ஒட்டிச்செயற்பட்டவர்கள்**

பொதுவிவகாரங்கள் துறை அளித்த அறிக்கைகள்தான் இந்த வேறுபாட்டுக்குக் காரணம். போர்ப்பகுதிகளில் அமெரிக்க இராணுவத்துடன் ஒட்டிச்செயற்பட்ட பத்திரிகையாளர்களின் (எம்பெடட் ஜர்னலிஸ்ட்ஸ்) எண்ணிக்கை ஒவ்வொரு அறிக்கைக்கும் மேலே தரப்பட்டிருந்தது. எனது ஒட்டுமொத்த பணிக் காலத்திலும் அந்த எண்ணிக்கை 12 ஐத் தாண்டவே இல்லை. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் ஒட்டுமொத்த ஈராக்கிலும் 3.1 கோடி மக்களும் 1,17,000 அமெரிக்க துருப்புகளும் இருந்தார்கள். ஆனால், இராணுவ நடவடிக்கைகளைப் பதிவு செய்வதற்கான அமெரிக்கப் பத்திரிகையாளர்களின் எண்ணிக்கையோ ஒரு டஜன் மட்டுமே.

இராணுவ நடவடிக்கைகளில் ஊடகங்கள் செய்தி சேகரிப்பை கட்டுப்படுத்துவது என்பது ஒரு பத்திரிகையாளர் ஒட்டிச்செயற்படும் அந்தஸ்துக்கு விண்ணப்பிப்பதில் தொடங்குகிறது. பத்திரிகையாளர்களின் விண்ணப்பங்கள் பொதுவிவகாரங்கள் துறை அதிகாரிகளால் கவனமாக பரிசீலிக்கப்படும். இராணுவத்துடன் நல்ல உறவிலிருக்கும் பத்திரிகையாளர்களுக்குத்தான் ஒட்டிச்செயற்படும் பத்திரிகையாளர் அந்தஸ்து வழங்கப்படும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எந்தப் பத்திரிகையாளர் இராணுவத்திற்கு உகந்த விதத்தில் செய்தியளிக்க வாய்ப்பிருக்கிறதோ அவருக்கே முன்னுரிமை.

தேர்ந்தெடுக்கப்படும் பத்திரிகையாளர்கள் அதற்குப்பிறகு அடிப்படை ஊடக விதிமுறைகள் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். இந்த ஒப்பந்தம் மூலமாக சம்பந்தப்பட்ட பத்திரிகையாளரின் ஒட்டிச் செயற்படும் அந்தஸ்தை எந்த நேரத்தில் முடிபுக்குக் கொண்டு வர முடியும். இதில் எந்த முறையீடும் செல்லாது.

**சலுகை மட்டுமே, உரிமை அல்ல**

சர்ச்சைக்குரிய செய்தி வெளியீடுகள் காரணமாக பல முறை, பத்திரிகையாளரின் ஒட்டிச்செயற்படும் அந்தஸ்து இரத்துச்செய்யப்பட்டிருக்கிறது. பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஒருவர் ஒருமுறை இப்படிச்சொன்னார்: "ஒட்டிச் செயற்படும் அந்தஸ்து என்பது ஒரு உரிமை அல்ல, அது ஒரு சிறப்பு சலுகை மட்டுமே". ஒரு பத்திரிகையாளரின் ஒட்டிச் செயற்படும் அந்தஸ்து இரத்துச் செய்யப்பட்டுவிட்டது என்றால் அவர் கட்டம்கட்டப்பட்டுவிட்டார் என்றே அர்த்தம். இப்படி இரத்துச் செய்யப்பட்டதற்கு எதிராக ஒரு நிருபர் தொடுத்த வழக்கில் இராணுவம் செய்தது சரியே என்றும் ஒட்டிச்செயற்படும் பத்திரிகையாளர் உரிமைகள் தொடர்பாக எந்தச் சட்டமும் இல்லை என்றும் கூறி நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

வியட்நாம் போரின்போது மக்களின் கருத்துக்களில் ஊடகங்கள் செலுத்திய செல்வாக்கை மனதில் கொண்டே இப்படி ஒட்டிச்செயற்படும் பத்திரிகையாளர் குழுவை அமெரிக்கா செயற்படுத்தத் தொடங்கியது. ஆப்கானிஸ்தானில் இன்றுவரை இது தொடர்கிறது. அமெரிக்கா எங்கெல்லாம் படைகளை அனுப்புகிறதோ, அங்கெல்லாம் இப்படிப்பட்ட பத்திரிகையாளர்கள் குழு அனுப்பப்படுகிறது.

இப்போது இருக்கும் நடைமுறை இதுபோன்ற ஒட்டிச் செயற்படும் பத்திரிகையாளர்களுக்குள் ஒருவித போட்டியை ஏற்படுத்தி விடுகிறது. உள்துறை மற்றும் வெளியுறவு தொடர்பான முக்கியமான தகவல்களைப் பெறுவதில் உள்ள போட்டிதான் அது. இதன் விளைவாக இப்படிப் பெற்று வெளியிடப்படும் செய்திகள் கொள்கை வகுப்பாளர்களை துதிபாடும் விதத்தில் அமைந்துவிடுகின்றன. இதனால் அமெரிக்க மக்களுக்கு உண்மை நிலவரம் மறைக்கப்பட்டு, அமெரிக்க அதிகாரிகளின் செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கு வழியே இல்லாமல் போய்விடுகிறது.

ஒட்டிச்செயற்படும் அந்தஸ்தில் சீர்திருத்தங்கள் செய்யப்படுவதற்காகப் பத்திரிகையாளர்கள் குரல் எழுப்ப வேண்டும். பத்திரிகையாளரின் கடந்த கால இதழியல் அனுபவம் (அதாவது இராணுவத்துடனான நல்லுறவு) அடிப்படைத் தகுதியாக இருக்கக் கூடாது. தேர்ந்தெடுக்கும் முறைகளில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். இராணுவ ஊழியர்கள். பென்டகன் ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோர் அடங்கிய குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு போர் நடவடிக்கைகள் போன்றவை குறித்து மக்களிடையே இருக்கும் தகவல் தாகத்தைத் தீர்க்கும்படியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேநேரத்தில் இராணுவ நடவடிக்கைகளின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். தகவல்களைப் பெறுவதற்கு பத்திரிகையாளர்களுக்கு உரிய காலத்தில் அனுமதி வழங்கப்படவேண்டும். இராணுவ நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்காத இரகசியத் தகவல்களை இராணுவம் உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக தாக்குதல்கள், அதனால் நிகழும் இறப்புகள் குறித்து இராணுவம் சுருக்கமான தகவல்களை உடனடியாக தெரிவிக்க வேண்டும். இதனால் உண்மைத் தகவல்களைப்பெற்று பத்திரிகையாளர்கள் செய்தி வெளியிடமுடியும்.

தாங்கள்தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் குறித்த நம்பிக்கை அமெரிக்க மக்களிடையே வெகுவாகக் குறைந்திருப்பதைக் கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. இராணுவ நடவடிக்கைள் போன்றவை குறித்த தகவல்கள் ஊடகங்களுக்குப் போதுமான அளவு கிடைக்கச் செய்வதால் வாக்காளர்கள் இழந்த நம்பிக்கையை மீண்டும் உயிர்ப்பிக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

-இணையம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை அசௌகரிய நிலைக்கு தள்ளியது இந்த அரசாங்கமே

## கிரியெல்ல எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டையும் முப்படையினரையும் அசௌகரியமான நிலைமைக்கு தள்ளியது இன்றைய அரசாங்கமே அன்றி, வேறு எவருமல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போர் முடிவுக்கு வந்ததுடன் 2009 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் அமைச்சர்களை சந்தித்த பின்னர் ஜனாதிபதியுடன் கூட்டறிக்கை ஒன்றில் கையெழுத்திட்டார். அந்த கூட்டறிக்கைக்கு அமைய போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த சர்வதேச மனிதவுரிமை மீறல்கள் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பில் இலங்கைக்குள் உள்நாட்டு விசாரணை நடத்த இணக்கம் காணப்பட்டது.

மேலும் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அடிப்படையாக கொண்டு அரசியல் தீர்வை வழங்கவும் இணக்கம் காணப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஐ.நா. செயலாளருக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட தாருஸ்மன் தலைமையிலான நிபுணர்கள் குழுவை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருந்தாலும் அந்த குழுவிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் கடிதங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளன.

தாருஸ்மன் குழு எழுப்பிய சில கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் வழங்கிய பதில்களில் ஒன்றில், போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் முப்படைகளில் பணிபுரியும் நபர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் எழுத்து மூலம் உறுதியளித்துள்ளது.

அத்துடன் பான் கீ மூனுடன் கூட்டறிக்கையை கையெழுத்திட்ட சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியோ அரசாங்கமோ அதுபற்றி நாடாளுமன்றத்தில் ஏன் முன் அனுமதியை பெறவில்லை?.

கூட்டறிக்கை மூலமும் மேற்படி கடித பரிமாற்றங்கள் மூலமும் நாட்டையும் முப்படையினரையும் அசௌகரியமான நிலைமைக்கு தள்ளியது அரசாங்கமே அன்றி வேறு எவருமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சீபா உடன்படிக்கையில் திருத்தம்; தயாராகி வருகின்றது இந்தியா

இலங்கை உட்பட வெளிநாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள சீபா என்ற சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் மீண்டும் திருத்தங்களை மேற்கொள்ள இந்தியா தயாராகி வருவதாக அந்நாட்டின் வர்த்தக அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பொருளாதாரத்திற்கு குறித்த நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை வழங்கும் பங்களிப்புகள் தொடர்பாக கவனம் செலுத்தி இந்த திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

இதனடிப்படையில் தொடர்ந்தும் சீபா உடன்படிக்கையை தொடர்வதா, இல்லையா என்பது பற்றியும் ஆராயப்படவுள்ளது.

எவ்வாறாயினும் சீபா உடன்படிக்கை மூலம் இந்தியாவைவிட இலங்கைக்கே நன்மை கிடைப்பதாக இந்தியாவில் குற்றம் சுமத்தப்படுகிறது.

எனினும் மேலும் அதிகளவான பொருளாதார நன்மைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தியா அந்த உடன்படிக்கையில் திருத்தங்களை செய்ய தயாராகி வருவதாக இலங்கை பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# புலிகளை அழித்தமை மேற்குலகிற்கு எரிச்சல்

## அமைச்சர் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

நவநீதம்பிள்ளை தனது அதிகார வரம்பை மீறி பக்கச்சார்பாக செயற்பட்டு இலங்கைக்கு எதிராக முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் ஐ.நாவின் நற்பெயருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனிதவுரிமைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளமை தொடர்பில் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு விளக்குவதற்காக இரத்தினபுரி நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்தை இலங்கை எப்படி தோற்கடித்தது என்ற பிரச்சினை மேற்குலக நாடுகளுக்கு உள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகள் குறித்து அவர்கள் அதீத மதிப்பீடுகளை கொண்டிருந்தனர்.

புலிகளின் மிலேச்சத்தனமான பயங்கரவாதத்தை எமது நிகழ்ச்சி நிரல் மற்றும் எமது வழிமுறைகளின் அடிப்படையில் தோற்கடித்தோம்.

இது அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே, கனடா போன்ற நாடுகளுக்கு அவமதிப்பாகிபோனது. இதனால் இலங்கைக்கு எதிராக மனிதவுரிமை குற்றச்சாட்டுக்களை சுமத்தி எம்மை இறுக்க முயற்சித்து வருகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் கொள்கைகளுக்கு அமைய சகல நாடுகளுக்கும் இறையாண்மையும் சுதந்திரமும் உள்ளது. இந்த நாடுகளில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது அந்நாடுகளில் இறையாண்மைக்கு நேரடியாக சவால் விடுப்பதாகும்.

ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழுவும் அமெரிக்கா போன்ற பலமிக்க நாடுகள் சிலவற்றின் அழுத்தங்களுக்குள் சிக்கியுள்ளது. உண்மையில் இது திட்டமிட்டு அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தும் நடவடிக்கையாகும்.



அமெரிக்கா மீதுள்ள அச்சம் காரணமாகவே மனிதவுரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்று ஒரு தகவல்

## தாவும் மனிதர்கள்

உண்மையும் நேர்மையும் உயர்வதற்கு வழிகள். அதைவிட்டு விட்டு உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே உயரப் போக வேண்டும் என்று நினைக்கக் கூடாது.

அதேபோல் செய்யும் தொழிலே தெய்வம். எந்தத் தொழிலைச் செய்தாலும் அந்தத் தொழிலுக்குரிய பெருமையை புரிந்து கொண்டு அதில் ஈடுபடவேண்டும்.

அதை விட்டு என்ன பிழைப்பு இது. இந்த தொழிலை மனுஷன் செய்வானா? என்று சொல்லிக் கொண்டே அந்தத் தொழிலை தொடர்ந்து செய்பவர்கள் நம்மில் பலருண்டு.

எனக்கு வேண்டப்பட்ட நண்பர் ஒருவரை சந்தித்தேன். அவர் ஒரு கதை சொன்னார். இந்தக் கருத்துக்கு அந்தக் கதை பொருத்தமாக இருக்கும்.

அதாவது ஒரு பெரிய மலைப்பகுதி. அந்த மலையடிவாரத்தில் ஒரு சிற்பி உட்கார்ந்து சிலை வடித்துக் கொண்டிருந்தான்.

கையில் ஒரு சின்ன உளியை வைத்துக் கொண்டு ஒரு பெரிய கருங்கல் பாறையை கொஞ்சம் கொஞ்சமாக உடைத்துக் கொண்டிருந்தான். சிற்பம் செய்வதற்கு எல்லோராலும் முடியுமா? அது எப்பேற்பட்ட தொழில்,

அந்த தொழிலின் மூலம் சிற்பிக்கு மன நிறைவு ஏற்படவில்லை. வெயிலில் இருந்து வேலை செய்வது மிகவும் கஷ்டமாக இருந்தது. சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்தான். சிற்பியாக இருப்பதால் தானே சூரியன் கடுமையான வெயிலை நம் மீது பாய்ச்சுகிறான். நாம் அந்த சூரியனாக இருந்து விட்டால் கஷ்டமே இராது என்று நினைத்தான்.

உடனே அவனது எண்ணம் நிறைவேறியது. இயற்கை அந்த சிற்பியை ஒரு சூரியனாக மாற்றிவிட்டது. சிற்பி சூரியனாக மாறிவிட்டான். இந்த உலகத்தில் நம்மைவிட வலிமையுடையவன் யாரும் கிடையாது என்று நினைத்தான். இந்த நேரத்தில் மேகம் வந்து சூரியனை மறைத்துவிட்டது.

இப்பொழுது சிற்பி நினைத்தான். என்னையே மேகம் மறைக்கிறதென்றால், அது என்னைவிட பெரிய ஆளாகத்தான் இருக்க வேண்டும். அதனால் மேகமாக இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

இயற்கை அவனை ஒரு மேகமாக மாற்றிவிட்டது. மேகமாக மாறி வான வீதியால் உலா வந்து கொண்டிருந்த போது எதிரில் பெரியமலைகள் போகும் வழியை அடைத்துக் கொண்டு நின்றது. அதைத்தாண்டி போக முடியவில்லை. நாம் மேகமாக இருந்து பயனில்லை. மலையாக இருக்க வேண்டும். அதுதான் பெருமை என்று நினைத்தது மேகம்.

உடனே மேகமாக இருந்த சிற்பி மலையாக மாறிவிட்டான். இனிமேல் எந்த கஷ்டமும் இல்லை என்று நினைத்தது மலை. இப்படி நினைத்துக் கொண்டிருந்தபோது சிற்பி ஒருவன் மலையை உடைத்து சிற்பம் செய்து கொண்டிருந்தான்.

மலையையே ஒருவன் உடைக்கிறான் என்றால் அவன் எப்படிப்பட்ட வலிமையுடையவனாக இருக்க வேண்டும். இனி மேல் மலையாக இருந்து பிரயோசனமில்லை. மனிதனாக மாற வேண்டும் என்று நினைத்தது மலை.

உடனே மலை மனிதனாக மாறியது. மறுபடியும் பழைய நிலைமைக்கு வந்து விட்டான் அந்த ஆள். இதிலிருந்து விளங்கிக் கொள்வது என்னவெனில்,

"தன்னுடைய உண்மையான பலம் தெரியாமல் தாவித்தாவி தடுமாறிக் கொண்டிருக்கிறான் மனிதன்" என்பதுதான்.

இனிமேலாவது அதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு குடும்பத் தலைவருக்கு விபரீதமான ஆசை. அதாவது ஒருநாள் முழுவதும் சேலை கட்டிக் கொண்டு மனைவி செய்யும் வீட்டு வேலைகள், சமையல் எல்லாம் செய்ய வேண்டும். மனைவியை ஆண் வேடம் போட்டு அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும். இதுதான் அந்த ஆசை. அதே மாதிரி செய்து விட்டார். பெண் வேடத்தில் சமையல் செய்து கொண்டிருந்த போது இருட்டி விட்டது. யாரோ கதவை தட்டும் சத்தம் கேட்டது. ஓடிப்போய் திறந்தார். பக்கத்து வீட்டு அம்மா ஏதோ வாங்குவதற்கு வந்தார். இவர் பயந்துபோய் "கமலா அம்மா... நான் சுசிலா இல்லை. சுசிலாவின் புருஷன். சும்மா ஒரு சேஞ்சுக்கா!" என்றார். உடனே அந்த அம்மா "பயப்படாதே நானும் கமலா இல்லை. கமலாவின் புருஷன். இதுவும் ஒரு சேஞ்சுக்குத்தான்" என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசற்படியில் விசாரணை

ஐ.நா. மனிதவுரிமை பேரவையில், இலங்கை தொடர்பாக அமெரிக்காவினால் தொடர்ந்து மூன்றாண்டுகளாக சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பிரேரணைகளையும் நிராகரித்து வந்த இலங்கை அரசாங்கம், அதனால் என்ன எதிர்பார்த்தது என்பது தெளிவில்லை.

. தாம் எதிர்த்தால், மனிதவுரிமை பேரவை அந்தப் பிரேரணையை இரத்துச் செய்யும் என்றோ அல்லது அதன் கீழ் மேற்கொள்ளப்பட விருக்கும், இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை மனிதவுரிமை பேரவைகைவிடும்என்றோஇலங்கை தலைவர்கள் நினைத்தார்களோ தெரியாது.

ஜனாதிபதி அவ்வாறு நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் அவ்வாறு நினைக்கும் அமைச்சர்கள் இலங்கை அரசாங்கத்தில் இருக்கிறார்கள். 2010 ஆம் ஆண்டு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீமூன், இலங்கை விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்க, மர்சுகி தருஸ்மானின் தலைமையில் குழுவொன்றை நியமித்த போது, அதனை இரத்துச் செய்யுமாறு கோரி அமைச்சர் விமல் வீரவன்ச, சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்தார். உண்ணாவிரதத்திற்கு முன்னர் அங்கு குழுமியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய வீரவன்ச, ஒரு அமைச்சரும் போராட்டத்தில் குதிக்கப் போகிறார் என்பதை பான் கீ மூன் அறிந்து கொள்ள வேண்டும் என்று எச்சரித்தார்.

இலங்கையின் அமைச்சர் ஒருவர் உண்ணவிரதம் இருந்தால், ஐ.நா. செயலாளர் நாயகம் தமது முடிவை இரத்துச் செய்துவிடுவார் என்று, வீரவன்ச நினைத்தார் போலும். இல்லாவிட்டால் தமது உண்ணாவிரதத்தை சாகும் வரையிலான உண்ணாவிரதமாக அறிவிப்பாரா? தமது உயிரை காக்க, பான்கீ மூன் மேற்படி குழுவை இரத்துச் செய்வார் என்று நினைக்கும் அளவிற்கு, இலங்கை அமைச்சர்கள் உலக அரசியலைப் பற்றிய அறிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். வீரவன்ச அல்ல, சதாம் ஹுசைன், கதாபி, கிம்-ஜொங்-இல் போன்றவர்கள் செய்த போராட்டங்களையே ஐ.நா. பொருட்படுத்தவில்லை.

அமெரிக்கப் பிரேரணைகளை நிராகரிக்கிறோம்... நிராகரிக்கிறோம் என்று இலங்கை தலைவர்கள் கூறிக் கொண்டு இருக்கும் போது, அந்த பிரேரணைகளின் காரம் அதிகரித்துக் கொண்டே சென்று, இப்போது இலங்கையில் புலிகள் அமைப்புக்கு எதிரான போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்காக, மனிதவுரிமை பேரவை விசாரணைக் குழுவொன்றையும் நியமித்துள்ளது. அரசாங்கம் அதனையும் நிராகரிப்பதாக கூறுகிறது.

2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் மனிதவுரிமை பேரவையில், அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட, இலங்கை தொடர்பான இரண்டு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. போரின் இறுதிக் கட்டத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள், சர்வதேச மனிதநேய சட்ட மீறல்கள் ஆகியவற்றைப் பற்றி விசாரணை செய்வதற்காக, இலங்கை அரசாங்கம் உள்நாட்டு பொறிமுறையொன்றை வகுத்துக் கொள்ள வேண்டும் என்றே அந்தப் பிரேரணைகளின் மூலம் கோரப்பட்டு இருந்தது.

ஆனால், அரசாங்கம் 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற திருகோணமலை மாணவர்கள் ஐவரின் கொலை மற்றும் மூதூர் அக்ஷன் பாம் தொண்டர்களின் கொலை ஆகியவற்றை விசாரிப்பதற்கு, சில நடவடிக்கைகளை எடுத்ததே தவிர, போரின் இறுதிக் கட்டத்தில் அநாவசியமாக இரு தரப்பினராலும் கொல்லப்பட்ட ஆயிரக் கணக்கானோரைப் பற்றி உருப்படியாக எதனையும் செய்யவில்லை.

எனவே தான், கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் கூடிய மனிதவுரிமை பேரவையின் 25ஆவது கூட்டத் தொடரின் போது, அமெரிக்கா மற்றொரு பிரேரணையை கொண்டு வந்தது. மேற்படி மனிதவுரிமை மற்றும் சர்வதேச மனிதநேய சட்ட மீறல்களை விசாரணை செய்வதற்காக, சர்வதேச பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று அதன் மூலமே நிறைவேற்றப்பட்டது. அந்த சர்வதேச விசாரணை தான் இப்போது வந்திருக்கிறது.

கடந்த 10ஆம் திகதி மனித உரிமை பேரவையின் 26 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகியது. அங்கு தமது ஆரம்ப உரையை நிகழ்த்திய ஐ.நா. மனிதவுரிமை உயர்ஸ்தானிகர் நவநீதம் பிள்ளை, அந்த சர்வதேச விசாரணை பொறிமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதை உத்தியோகபூர்வமாகவும் பகிரங்கமாகவும் தெரிவித்தார். அதற்கு முன்னைய வாரத்தில் மனிதவுரிமை உயர்ஸ்தானிகரின் அலுவலகம் இந்த பொறிமுறையை ஆரம்பிப்பதைப் பற்றி அரசாங்கத்திற்கு எழுத்து மூலம் அறிவித்து இருந்தது.

இப்போதைக்கு வெளியாகியுள்ள தகவல்களின் பிரகாரம், நியூசிலாந்தின் முன்னாள் ஆளுநரும் சட்ட வல்லுநரும் கம்போடியா வில் 1980களில் இடம்பெற்ற இலட்சக் கணக்கான படுகொலைகளைகளைப் பற்றிய சர்வதேச விசாரணைக் குழுவின் அங்கத்தவராக இருந்த வருமான சில்வியா ரோஸ் கார்ட்ரைட் (Silvia Rose Cartwright) ,இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகளைப் பற்றி விசாரணை செய்யும் குழுவிற்குத் தலைமை தாங்கவிருக்கிறார்.

அதேவேளை, அக் குழுவின் இணைப்பாளராக, இதற்கு முன்னர் தென் சூடானில் ஐ.நா அலுவலகத்தில் கடமையாற்றிய சன்ட்ரா பெய்டாஸ் (Sandra Baidas) கடமையாற்றவிருக்கிறார். கடந்த 10ஆம் திகதி மனிதவுரிமை பேரவையின் கூட்டம் ஆரம்பமான போது ஜெனீவாவில் ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி ரவிநாத் ஆர்யசிங்கவும் இந்த சர்வதேச விசாரணையைப் பற்றி இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெரிவித்தார்.

தமது அரசாங்கம் இந்த விசாரணையை நிராகரிப்பதாகவும் இந்த விசாரணையும் இதற்கு அடித்தளமாக அமைந்த அமெரிக்க பிரேரணையும் இலங்கையின் இறைமையையும் சுதந்திரத்தையும் மீறும் செயலென கூறிய அவர், சன்ட்ரா பெய்டாஸின் நியமனத்தைப் பற்றி குறிப்பாக அதிருப்தியை தெரிவித்தார். ஐ.நா. சட்டங்களின் படி, உள்நாட்டு பொறிமுறைகள் முடிவடைந்த நிலையில் மட்டுமே சர்வதேச பொறிமுறையொன்றுக்கு இடமளிக்கப்பட முடியும் என்று கூறிய ரவிநாத், ஆனால் மனிதவுரிமை பேரவையின் சம்பந்தப்பட்ட பிரேரணை, சர்வதேச பொறிமுறையோடு உள்நாட்டு பொறிமுறையொன்றையும் வலியுறுத்துவதாகவும் சுட்டிக் காட்டினார்.

சன்ட்ரா பெய்டாஸின் நியமனத்திற்கு அவர் அதிருப்தி தெரிவிப்பதற்குக் காரணம், அரசியல் நாகரிகமற்ற முறையில் நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தென் சூடான் அரசாங்கம் 2012 ஆம் ஆண்டு அவரை அந் நாட்டில் இருந்து வெளியேற்றியமையே. தென சூடானில் மனிதவுரிமை நிலைமை தொடர்பாக அவர் வெளியிட்ட ஒரு அறிக்கையே இதற்கு காரணமாகியது. ஆனால், அவரது அறிக்கையில் எவ்வித தவறும் இல்லை என மனிதவுரிமை பேரவையும் மனிதவுரிமை உயர்ஸ்தானிகரின் அலுவலகமும் கூறி வருகின்றன.

கடந்த 10ஆம் திகதி மனித உரிமை பேரவையின் கூட்டம் ஆரம்பமான போது நிகழ்த்திய ஆரம்ப உரையின் போதும் மனிதவுரிமை உயர்ஸ்தானிகர் பதவியிலிருந்து ஓய்வு பெற முன் அங்கு நிகழ்த்திய இறுதி உரையின் போதும் நவநீதம்பிள்ளை, இலங்கை உட்பட உலகெங்கும் மனிதவுரிமை விடயத்தில் சர்வதேச சமூகம் தமது கடமையை சரியாக நிறைவேற்றவில்லை எனக் கூறினார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நவிபிள்ளை ஓய்வு பெறுகிறார். அவருக்கு பதிலாக வீரவன்சவின் சாகும் வரை உண்ணாவிரதத்திற்கு காரணமாக அமைந்த, ஐ.நா. குழுவின் தலைவராகவிருந்த மர்சூகி தாருஸ்மான் நியமிக்கப்படுவார் என்றே முனனர் கூறப்பட்டது. ஆனால்; அதற்கு பதிலாக அந்தப் பதவிக்கு ஜோர்தானைச் சேர்ந்த இளவரசர் சயீத் அல் ஹுஸைன்னை நியமிப்பதாக ஐ.நா. செயலாளர் நாயகம் சில நாட்களுக்கு முன்னர் அறிவித்தார்.

ஹுஸைன் அமெரிக்காவின் நண்பர் என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அரபு நாடொன்றை சேர்ந்தவராக இருந்த போதிலும் அவரது தாயார் ஒரு ஸ்வீடிஷ் பெண். மனைவி அமெரிக்கப் பெண். அவர் பிரிட்டனிலும் அமெரிக்காவிலுமே உயர் கல்வி கற்றார். ஐ.நா.வுக்கான ஜோர்தானின் நிரந்தர பிரதிநிதியாக இதற்கு முன்னரும் கடமையாற்றிய அவர், மனிதவுரிமை விடயத்தில் ஒரு கடும் போக்காளர் என்றே கூறப்படுகிறது.

இலங்கையின் மனிதவுரிமை மீறல்களைப் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவியாக கடமையாற்றப் போகும் சில்வியா கார்ட்ரைட்டும் மனிதவுரிமை விடயத்தில் கடும் போக்காளர் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் தான் இலங்கை அரசாங்கம் தமக்கு எதிரான விசாரணையை எதிர்நோக்கப் போகிறது.

கடந்த 10ஆம் திகதி மனிதவுரிமை பேரவைக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி, விசாரணையை நிராகரித்த அதே வேளை, அன்றே கூடிய ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியக் குழு இந்த விடயத்தைப் பற்றி நாடாளுமன்றத்தின் கருத்தை அறிந்து செயற்படுவதென தீர்மானித்தது.



இது முரண்பாடான நிலைப்பாடாகும். அரசாங்கம் ஏற்கனவே ஐ.நா. விசாரணையை நிராகரித்து இருந்தால் நாடாளுமன்றத்தின் கருத்தை அறிய என்ன இருக்கிறது? அதேவேளை, அரசாங்கம் விசாரணையை நிராகரித்த போதிலும் அது தமது முடிவை மாற்றிக் கொள்ளவும் தயார் எனபதையே, பிரச்சினையை பற்றி முடிவெடுப்பதை நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்ததன், மூலம் தெரிய வருகிறது என்றும் வாதிடலாம். அரசாங்கம் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளத்தயாராக இல்லாவிட்டால் பிரச்சினையை நாடாளுமன்றத்திடம் ஒப்படைப்பதில் அர்த்தமில்லை.

. அரசாங்கம் விசாரணையை நிராகரிப்பதாகக் கூறி, சிங்கள மக்களிடையே தாம் தேசப்பற்றுள்ளவர்கள் எனறு பறைசாற்றிக் கொணடு மறுபுறத்தில் விசாரணையை எதிர்நோக்குவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவது நிச்சயம் என்பதால், அதன் பொறுப்பை நாடாளுமன்றத்தின் தலை மேல் சுமத்தப் போகிறது என்றும் வாதிடலாம்.

அதேவேளை, அரசாங்கம் விசாரணையை நிராகரிப்பதன் மூலம் தமது நிலைப்பாட்டை அறிவித்து இருப்பதால், நாடாளுமன்றத்தின் கருத்தை அறிவதென்பதில் எதிர்க் கட்சிகளின் கருத்தை தான அறியப் போகிறது. எதிர்க் கட்சிகளில் ஐக்கிய தேசிய கட்சி கடந்த சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையொன்றின் மூலம் அரசாங்கம் விசாரணையை எதிர்க்கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தது.

கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி பி.பி..சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியொன்றின் போதும் ம.வி.மு. தலைவர் அனுர குமார திஸாநாயக்க, மனிதவு ரிமை மீறல்கள் தொடர்பாக உள்நாட்டு விசாரணை பொறிமுறையொன்றை அமைக்க வேண்டும். ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை செய்வார் என்று நினைப்பது கனவாகும் என்றும் கூறியிருந்தார்.

எப்போதும் போல் ஆளும கட்சிக்கு இருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலத்தால் அதனை முடிவுசெய்வதாக இருந் தால், பிரச்சினையை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்ததிலும் அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

அரசாங்கம் தமது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலத்தை பாவித்து இந்த விசாரணையை நாடாளுமன் றமும் நிராகரிக்கிறது என்று மனிதவுரிமை பேரவையிடம் கூறினால் அதனால் ஏற்படப் போகும் மாற்றம் எதுவும் இல்லை. விசாரணை தொடரும்.

விசாரணை அதிகாரிகள் இலங்கைக்கு வர விசா வழங்காதிருக்கலாம். அப்போது விசாரணை ஒருதலைப்பட்சமாக மேற்கொள்ளப்படும். அது அரச படைகளுக்கு எதிராக மட்டும் நடைபெறும் விசாரணையாகிவிடும்.


ஏனெனில், புலிகளு க்கு எதிராக குற்றஞ்சுமத்த ஒருவரும் அங்கு இருக்க மாட்டார்கள். அதேவேளை, அரச படைகளுக்கு எதிரான விசாரணைகளின் போது அவர்களை பாதுகாக்கவும் ஒருவரும் இருக்க மாட்டார்கள். இது அரசாங்கம் பறைசாற்றிக் கொள்ளும் தேசபற்றுக்கு முரணானது.

*நன்றி:-இணையம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை கோருவது பகல்வேட அரசியல் நாடகம்

## அமைச்சர் டக்ளஸ் சபையில் தெரிவிப்பு



இலங்கை மீதான சர்வதேச விசாரணையை அனுமதிப்பதா? இல்லையா? என்ற விடயத்தை இந்த நாடாளுமன்ற விவாதத்திற்கு எடுத்துக் கொண்டதை நான் வரவேற்கின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஐ.நா. விசாரணைகுழுவை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பான பாராளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டின் மீதான சர்வதேச விசாரணை தேவையா? இல்லையா? என்பதை தீர்மானிக்க வேண்டியவர்கள் இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களே.

ஆகவே இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களினதும் பிரதிநிதிகளைக் கொண்ட இந்த நாடாளுமன்ற சபையே அதற்கான தீர்மானத்தை எடுக்க முடியும்.

எங்கே வெடிகுண்டு சத்தங்கள் கேட்கின்றனவோ எங்கே உள்நாட்டு குழப்பங்களும் கலவரங்களும் யுத்தங்களும் நிகழ்வுகின்றவோ அல்லது தேவையான இடங்களில் தாமே திட்டமிட்டு குழப்பங்களை உருவாக்கியும் அங்கெல்லாம் தலையை நீட்டி தமது வல்லாதிக்கத்தை நிலைநாட்டவே சில வெளியுலக நாடுகள் காத்திருக்கின்றன.

இப்போது கூட துரதிர்ஷ்டவசமாக தென்னிலங்கையின் சில பிரதேசங் களில் நடந்திருக்கும் எமது இன சமூக மக்களுக்கிடையிலான மோதல்கள் சில வெளியுலக நாடுகளின் கழுகுக் கண்களுக்கு விருந்து படைப்பதாகவே அமைந்திருக்கின்றன.

இதேவேளை இன சமூக மக்களுக்கிடையிலான மோதல்களை தூண்டிவிட்டவர்கள் ஏவராக இருப்பினும் அவர்கள் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படுவார்கள் என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களும் இழப்பீடுகளும் விரைவாக வழங்கப்படும் என்றும் நான் நம்புகின்றேன்.

பாலஸ்தீன மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அல்லது தாமே உருவாக்கிய எகிப்தின் பிரச்சினையையோ சிரியாவின் பிரச்சினையையோ ஆப்கான் ,ஈராக், லிபிய மக்களின் பிரச்சினைகளையோ தீர்க்காமல் அங்கெல்லாம் குருதியாற்றை தொடர்ந்தும் ஓட வைத்த சர்வதேச போலிச் சமாதான இராஜதந்திரத்தையே இன்று இலங்கை மீதும் சில வெளியுலக நாடுகள் திணிக்க முயல்கின்றன.

போருக்கு முடிவு கட்டி வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து அபிவிருத்திப் பாதையில் தேசத்தை நடத்திச் செல்கிறது எமது இலங்கைத் தீவு.

இதேவேளை அரசியல் தீர்விற்கான கதவுகளைதிறந்து விட்டு அதன் முன்னோக்கிய நகர்விற்கான நல்லெண்ண சமிக்ஞையையும் அரசாங்கம் காட்டி வருகின்றது.

இலங்கை மீதான சர்வதேச விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டால் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கை மக்களுமே அதன் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதையே நான் இன்று தொலை தூர நோக்கில் கூறி வைக்க விரும்புகின்றேன்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் வரை நானும் ஒரு சுதந்திர போராட்ட விடுதலை இயக்கத்தை களத்தில் நின்று வழிநடத்தி சென்றவன்.

இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இங்கு யுத்தம் நிறுத்தப்பட்டு பெற்றுக்கொண்ட 13 ஆவது திருத் தச் சட்டத்தை அரசியல் இலக்கு நோக்கி வளர்த்தெடுக்க வேண்டும் என்பதையே வலியுறுத்தியிருந்தேன்.

உரிமைப் போராட்டம் என்பது வேறு எதையும் பெற முடியாத அழிவு யுத்தம் என்பது வேறு. இதையே நான் திரும்ப திரும்பக் கூறி வந்திருக்கின்றேன்.

இவைகளை அன்றைய சூழலில் அரசியல் துணிச்சலோடும் தொலை தூர நோக்கோடும் நான் மட்டுமே கூறி வந்திருக்கின்றேன்.

இதுவரை கிடைத்த சந்தர்ப்பங்களை சுயலாப தமிழ் தலைமைகள் சரிவரப்பயன்படுத்தியிருந்தால் இங்கு யுத்தம் நீடித்து சென்றிருக்காது.

நாம் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வந்துள்ள 13 ஆவது திருத்தத் சட்டத்திற்கே வந்து இன்று மாகாண சபையை ஏற்றுக் கொண்டவர்கள் அதை அன்றே ஏற்று வந்திருந்தால் இத்தனை அவலங்களும் அழிவுகளும் நடந்திருக்காது. அவலங்களும் அழிவுகளும் நடப்பதற்கான யுத்த சூழலை தாமே உருவாக்கி விட்டு இன்று யுத்தக் குற்றம் என்றும் சர்வதேச விசாரணை என்றும் கோருவது வெறும் பகல்வேட அரசியல் நாடகமே.

அண்ணன் ,தம்பிக்குள் இருந்த சிறு பிரச்சினைகளை வெளியார் மூலமாகத் தீர்த்துவிடலாம் என்ற தப்பான எண்ணம் இந்த நாட்டின் கடந்த கால தூரநோக்கற்ற அரசியல் தலைமைகளிடமும் தமிழ்த் தேசியத் தலைமைகளிடமும் இருந்ததன் விளைவையே இன்று இந்தத் தீர்வின் அனைத்து மக்களும் அனுபவித்து ஓய்ந்துள்ளோம்.

இந்த நாட்டின் பிரச்சினைகளை இந்த நாட்டுக்குள்ளேயே தீர்க்க வேண்டும் என்ற ஒரு உறுதியான தலைமைத்துவம் 2005 ஆம் ஆண்டு இலங்கைத் தீவில் உருவாகி அது பல தசாப்தங்களாக இந்தத் தீவை ஆட்டிப்படைத்த ஆயுத முரண்பாட்டுக்குமுடிவுகட்டிஅபிவிருத்திப் பாதையில் ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கைத்தீவை வளர்த்து வருகிறது.

இதைப் பொறுக்கமாட்டாத இன்னும் சில சர்வதேசநாடுகள் தொடர்ந்தும் இந்தத் தீவின் மீது தமது செல்வாக்கை நீடிக்கும் நோக்குடன் முடிந்து போன விடயங்களுக்கு முடிச்சுப் போட்டு வில்லங்கத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன.

தமிழ் பேசும் மக்களின் சார்பாக நான் அரசாங்கத்தின் உறவுக்குக் கரம் கொடுக்கின்றேன். அதே வேளை எமது மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்து நிற்கின்றேன்.

எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள நாமே உறுதியுடன் உழைப்போம். எமது மக்களின் துயரக்கதைகள் யாவும் இந்த தலைமுறையோடு மட்டும் முடிந்து போகட்டும். அடுத்த தலைமுறைக்கு நாம் வழங்கப் போவது அரசியல் தீர்வின்றி வாழும் துயரங்களும் அல்ல. அடுத்தவனிடம் கையேந்தி நிற்கும் அவலங்களும் அல்ல.

எங்கிருந்தோ வந்து மீட்பவர்கள் என்று ஏமாற்றும் நிலை மாற்றி இங்கிருந்து நாமே படைக்கும் புதிய வரலாற்றை இந்த தலைமுறைக்கே நாம் வழங்க வேண்டும்.

மீண்டும் மீண்டும் இனப்பகை மூட்டி அதிலேயே தமது அரசியலை நடத்திப் பழகிவிட்ட தமிழ்த் தேசியத் தலைமைகள் புலம்பெயர் தேசத்து மக்களின் டொலர்களுக்கு வாலாட்டிக்கொண்டு மீண்டும் இந்த தேசத்தை அழிவுப்பாதைக்குள் இட்டுச் செல்ல முயலாமல் போருக்கு பிந்திய ஜப்பான், ஜேர்மன் தேசங்கள் தம்மைக் கட்டியெழுப்பிய வரலாறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு ஒரு தேசமாக இலங்கைத் தீவைக்கட்டிக்காத்து அதற்குள் தமிழர் உரிமைகளை வென்றெடுக்கும் சாத்தியமான அரசியல் அணுகுமுறையைக் கடைப்பிடிக்க முன் வரவேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கு இறுதி தீர்வு கிடைக்காத வரை எங்கள் பயணம் ஒருபோதும் நிற்காது.

எமது மக்கள் தமிழர்களாக வாழ வேண்டும் என்பதற்காக இலங்கையர் என்ற அடையாளத்தை இழக்கவோ அல்லது இலங்கையராக வாழவேண்டும் என்பதற்காக தமிழர் என்ற அடையாளத்தை இழக்கவோ விரும்புவதில்லை.

எமது மக்கள் தமிழர்களாகவும் அதேநேரம் இலங்கையராகவுமே வாழ விரும்புகின்றார்கள் என்பதை மீண்டும் இச்சபையில் வலியுறுத்த விரும்புகின்றேன் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தாக்குதலின் சூத்திரதாரிகள் கைது செய்யப்படவில்லை

## மன்னார் ஆயர் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையின் தென் மேற்குப் பகுதியில், குறிப்பாக அளுத்கம மற்றும் பேருவளையில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைக்கு தமிழ் சிவில் சமூக அமையம் கண்டனம் வெளியிட்டுள்ளது. இவ் அமையம் சார்பில் மன்னார் ஆயர் கலாநிதி இராஜப்பு ஜோசப்பினால் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வன்முறையில் இறந்தோரின் குடும்பத்தினருக்கு எமது இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்தக் கடினமான வேளையில் முஸ்லிம் சமூகத்தினருக்கு எமது முழுமையான சகோதரத்துவ ஆதரவையும் விளங்கிக் கொள்ளலையும் வெளிப்படுத்துகிறோம்.

இத்தாக்குதல்களுக்கு காரணமான பிரதான காரணகர்த்தாக்கள் இன்னும் கைது செய்யப்படாமல் இருப்பதையிட்டு கலக்கமடைகின்ற போதிலும், நாம் ஆச்சரியப்படவில்லை.

இத்தாக்குதல்களுக்கு மூல காரணமாக இருந்தோர் பாதுகாப்புத் துறையின் மேலிடத்தோடு நெருக்கமாக இருப்பவர்கள் என்பதால் நாம் ஆச்சரியப்படவில்லை.

நாங்கள் இதில் ஆச்சரியப்படாமைக்கான மற்றொரு காரணம் இத்தகைய வன்முறைகள் முன்னர இடம்பெற்ற போதெல்லாம் சட்டத்தின் மௌனம் தொடர்ந்து நிலவி வந்தமையினால்ஆகும் இதுஇலங்கை வரலாற்றின் ஒரு அம்சமாகும்.

இவ் வன்முறைகள் இயல்பாக (திட்டமிடாமல்) நடைபெற்ற ஒன்றாகவோ, ஒரு புதிய நிகழ்வாகவோ விளங்கிக் கொள்ளப்படக்கூடாது.

தாக்குதல்களின் ஆரம்ப கட்டத்தில் கிடைக்கப்பெற்ற, நன்கு உய்த்தறியப்பட்ட செய்திகள் இத்தாக்குதல்களை நடத்தியவர்களை தடுத்து நிறுத்துவதற்கு பொலிஸாரோ, விசேட அதிரடிப் படையினரோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன.

வெகு நீண்ட காலமாக சிங்கள பௌத்த அரசினால் இந்நாட்டின் ஏனைய சமூகங்கள் மீது - அவர்கள் சமூக, கலாசார, அரசியல் பொருளாதார ரீதியாக முன்னேறக் கூடாது, அதற்கு இடமளிக்கக் கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டு, கட்டவிழ்த்து விடப்பட்ட தாக்குதல்களின் ஓர் அங்கமாகவே அளுத்கமவில் நடந்த தாக்குதல்களும் பார்க்கப்பட வேண்டும்.

அளுத்கம எமக்கு ஞாபகப்படுத்தும் சிக்கலான புரிதலை விளங்க கொள்ளவும் அதன் அடிப்படையில் செயற்படவும் அனைவரையும் வேண்டுகிறோம்என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி ஐயாத்துரை சிவபாக்கியம்

சாவகச்சேரி நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது மெல்பேர்ன் அவுஸ்திரேலியாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சிவபாக்கியம் கடந்த 16 ஆம் திக்தி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை Boyd Caapel Springvale Botanical Cemetry என்னும் முகவரியில் நடைபெறும்.

### ஈஸ்வரம்பிள்ளை காசிநாதன்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஈஸ்வரம்பிள்ளை காசிநாதன் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு Hither Green Crematorium, Verdant Lane, SE6 1TP, London, UK என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### சோமசேகரபிள்ளை சீராமலிங்கம்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சோமசேகரபிள்ளை சீராமலிங்கம் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி க்கு Chapel Ridge Funeral Home, 8911, Woodbine Avenue, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெஸ்ட் பேங்கில் பதற்ற நிலை; பாலஸ்தீனியர்கள் பலர் கைது

கடந்த வாரம் வெஸ்ட் பேங்க் பகுதியில் இஸ்ரேலை சேர்ந்த மூன்று இளை ஞர்கள அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் கடத்தப்பட்டனர்.

ஏற்கனவே, ஜெருசலத்தின் கிழக்குப் பகுதியை ஆக்ரமித்த திலும், வெஸ்ட் பேங்க் குடியி ருப்புப் பகுதிகளை கைப்பற்றி யதிலும் பாலஸ்தீனம் இஸ்ரே லுடன் தொடர்ந்து கருத்து வேறு பாடுகளைக் கொண்டுள்ளது.

என்வே, இந்தக் கடத்தலு க்கு பாலஸ்தீன அரசைக் குற்றம் சுமத்தியுள்ள இஸ்ரேல் இது வரை நூற்றுக்கும் மேற் பட்ட பாலஸ்தீனியர்களைக் கைது செய்துள்ளது. கடந்த சில வருடங்களில் இஸ்ரேல் எடுத்துள்ள மிகப்பெரிய கைது நடவடிக்கையாக இது கருதப் படுகின்றது.

இளைஞர்கள் கடத்தப் பட்டு ஆறு நாட்கள் சென்றுள்ள நிலை யில் பாலஸ்தீனத்தில் செயற்பட்டு வரும் ஹமாஸ் போராளிக் குழுவே இந்தக் கடத்தலுக்குப் பின்னணி யாக இருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் இஸ்ரேல் வெஸ்ட் பேங்க் பகுதியில் தனது பிடியை இன்னும் இறுக்கியுள்ளது.

இந்த நிலையில், பாலஸ் தீனிய மக்களை சிதைப்பதற் கான முயற்சியாகவே இந்த கடத்தல் முயற்சியை பால ஸ்தீனிய ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் குறிப்பிட்டுள்ளார்.

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பாதுகாப்பு ஒருங் கிணைப்பை பாதுகாக்கும் விதமாக ஹமாஸ் போராளிகளின் நடவடிக்கை குறித்து சீற்றம் மிகுந்த தனது கண்டனத்தை அவர் வெளி யிட்டார்.

பாலஸ்தீனிய அரசுக்கும், ஹமாஸ் போராளிகள் இய க்கத்திற்கும் இருந்துவந்த நீண்ட காலப் பிரச்சினைகள் கடந்த ஏப்ரலில் தான் ஒரு முடிவுக்கு வந்தது.

அப்போது மேற்கொள்ளப் பட்ட அமைதி ஒப்பந்தத்தின் படி வெஸ்ட் பேங்க், காசா பகுதிகளில் தொழில்நுட்ப வல்லுனர்கள் அடங்கிய ஒரு இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது.

இதன் பின்னர் இரு பிரிவு களுக்கும இடையே எழுந் துள்ள முதல் கருத்து வேறு பாடு இதுவாகும் என்று அர சியல் வட்டாரங்கள் குறிப்பிட் டுள்ளன.



கொலம்பியா ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்ற ஜுவான் மானுவல் சான்டோ தனது ஆதரவாளர்களுடன் வெற்றியை கொண்டாடிய போது...

## ஈராக்கிலிருந்து வெளியேறும் சீன எண்ணெய் நிறுவனங்கள்

ஈராக்கில் உள்ள இஸ்லா மியத் தீவிரவாத ஐ.எஸ்.ஐ.எல. அமைப்பி னர் கடந்த வாரம் அங்கு தொடங்கிய கடுமை யான தாக்குதல் களில் மொசுல், திக்ரித் நகரங்களைக் கைப் பற்றி தலை நகர் பக்தாத்தில் நுழைய கடுமையாக யுத்தம் நடத்தி வருகின்றனர்.

இதன் விளைவாக பல மேற் கத் தேய நாடுகளின் தூதர கங்களும் பக்தாத்திலுள்ள தங்களின் ஊழியர்களைத் திருப்பி அனுப்பத் தொடங் கியுள்ளன. தற்போது ஈராக் கின் தெற்குப் பகுதியில் செயற பட்டு வரும் சீன எண்ணெய் நிறு வனங்களும் தங்களின் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்வது குறித்து ஆலோசி த்து வருகின்றனர். இவர்களின் ஊழியர்களில் பத்தாயிரத்தி ற்கும் மேற்பட்டோர் அங்கு பணியில் உள்ளனர்.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதா ரத்தைக் கொண்டுள்ள சீனா வின் கச்சா எண்ணெய் இறக்கு மதியில் ஈராக் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அதேசமயம் ஈராக்கின் எண் ணெய் உற்பத்தி முத லட்டில் சீனா பெரும்பானமை பங்கை அளித்துள்ளது. போரா ளிகள் பக்தாத்தை நெருங்கி னால் நாங்கள் ஈராக்கிலிரு ந்து வெளியேற முடிவு செய்து ள்ளோம் என்று சீன தேசிய கடற் பகுதி எண் ணெய் நிறுவ னத்தின் ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதுவரை தெற்குப் பகுதியில் தயாரிப்பு உற்பத்தி நடைபெற்று வரும் நான்கு எண்ணெய் வயல் களின் பணியும் பாதிக்கப்பட வில்லை. எனினும் ஈராக் கின் வடக்குப்பகுதி யில்இருந்த சீன மக்கள் வெளியேற்றப்பட் டுளளனர். எனவே எதிர்பாராத நிகழவுகளுக்கான திட்டங்க ளையும் நாங்கள் வைத்துள் ளதாக அவர்மேலும்கூறினார்.

### ஏவுகணை சோதனை வெற்றி




ஒடிசா மாநிலம் பால சோரில் இருந்து இந்தியா வின் நவீன ஏவுகணையான ஆகாஷ் நேற்று வெற்றிகர மாக சோதனை செய்யப் பட்டது.

ஆகாஷ் ஏவுகணையின் இறுதி கட்ட சோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில், குறைந்த மட்ட த்தில் பறந்து சென்று இலக்கை ஏவுகணை சரியாக தாக்கிய தாகவும், இந்த சோதனை வெற்றி பெற்றதாகவும் அறி விக்கப்பட்டுள்ளது.

## பத்மனாப சுவாமி கோவில் பொக்கிஷங்கள் பொது மக்கள் பார்வையிடும் வாய்ப்பு

திருவனந்தபுரம், பத்மனாப சுவாமி கோவில் பாதுகாப்பு பெட்டக அறைகளில் உள்ள, பல இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள, தங்கம், வைர ஆபரணங்கள் மற்றும் பொருட் களை, பொதுமக்கள் பார் வைக்கு, அருங்காட்சியகத்தில வைக்க, கேரள அரசு முடிவு செய்துள்ளது.



இதன்மூலம், பலநூறு ஆண்டு களாக முடங்கிக் கிடந்த நகைகளை, அனை வரும் பார்க்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

கேரள மாநிலத்தின் தலை நகர் திருவனந்தபுரத்தில், பத்மனாப சுவாமி கோவில என்ற விஷ்ணு கோவிலுள்ளது.

திருவாங்கூர் அரச குடுமப த்தின் கட்டுப்பாட்டில் இருந்த, இந்த பிரமாண்ட கோவில் மூலஸ்தானத்தை சுற்றிலும, கருங்கற்களால் ஆன, பாது காப்பு அறைகள்ஆறு உள்ளன.

சில நூறு ஆண்டுகளாக, மூடியேகிடந்த அந்த அறைகள் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி 2011 இல் திறக்கப்பட்டது.

அதில், இரண்டு அறை களில், கோவில் திருவிழாக் களின் போது பயன்படுத்தப் படும் பொருட்கள் இருந்தன.

பிற மூன்று அறைகளை திறந்து பார்த்த போது, அவற்றி னுள், ஆயிரக்கணக்கான தங் கம், வெள்ளி, வைரம், வைடூரிய நகைகளும், தங்க குடங்கள், தாம்பாளங்கள், பானை போன்ற பொருட் களும் இருந்தன.

ஆறு பாதுகாப்பு அறை களில், "பி" என, குறிப்பிடப் பட்டுள்ள அறை மட்டும் இன் னும் திறக்கப்படவில்லை.

அந்த அறை, மூலஸ்தா னத்தின் கீழ் பகுதியில் அமை ந்து உள்ளது.

இந்நிலையில், கேரள சட்டசபையில், முதல்வர் உம்மன் சாண்டி, நேற்று முன்தினம் கூறுகையில், பத்ம னாப சுவாமி கோவில் பாது காப்பு அறைகளில், கணக்கிடப் பட்டு வரும் நகைகள் மற்றும் பொருட்கள், அருங் காட்சியம ஒன்றை ஏற்படுத்தி, அதில் பொதுமக்கள் பார்க்க வசதி யாக வைக்கப்படும் என்றார்.

இதனால், அந்த கோவி லின் பாரம்பரிய நகைகள் மற்றும் பொருட்களை, பக்த ர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட, வாய்ப்பு கிடைத் துள்ளது.

# ஈராக்கில் கடத்தப்பட்ட இந்தியர்கள் தொடர்பாக உறுதியான தகவல்கள் இதுவரை இல்லை

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எல். தீவிர வாதிகள் கைப்பற்றி யுள்ள மொசூல் நகரில் பணி யாற்றி வந்த இந்தி யர்கள் 40 பேர் கடத்தப்பட்டுள்ளனர்.

அங்குள்ள கட்டுமான நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த அவர்களது கதி என்ன வாயிற்று என்று இது வரை தகவல் இல்லை. இந்நிலை யில், அவர்களது இருப்பிட த தைக் கண்டறிந்து மீட்கும் முய ற்சியில் இந்திய மத்திய அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

கடத்தப்பட்ட அனைவரும் பஞ் சாப் மாநிலத்தைச் சேர்ந் தவர்களாகவோ, அல்லது பிற வட மாநிலங்களைச் சேர்ந்த வர்களாகவோ இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இதுகுறித்து வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித தொடர்பாளர் சையது அக்பரு தீன் கூறியதாவது,

ஈராக்கில் தாரிக் நுர் அல்ஹுதா நிறுவனத்தில் பணிபுரியும் 40 இந்தியர்கள் கடத்தப்பட்டுள்ளது உறுதியாகி யுள்ளது.

எனினும், அவர்கள் எங்கு கடத்தி வைக்கப்பட்டுள்ளா ர்கள் என்பது குறித்தோ, அல்லது பணயத் தொகை கேட்டோ யாரிடமிருந்தும் எந்த அழைப்பும் வரவில்லை.

இது தொடர்பாக ஈராக்கி லுள்ள ஐ.நா. குழு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுடன் தொடர்ந்து பேசி, கடத்தல் குறித்து தகவல்களைத் திர ட்டி வருகிறோம்.

40 இந்தியர்களும் பணி யாற்றி வந்த நிறுவனத்து டனும், அவர்கள் கடத்தப்பட் டுள்ளதை உறுதி செய்த சர் வதேச செம்பிறைச் சங்கத் துடனும் இணைந்து அவர் களது இருப்பிடத்தைக் கண் டறியும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம்.

அவர் மேலும் கூறுகை யல், ஐ.எஸ்.ஐ.எல். தீவிரவாதி களின் பிடியி லுள்ள திக்ரித் நகரில் இருக்கும் 46 செவி லியர்களுடன் மத்திய அரசு தொடர்பில் உள்ளது.

அவர்களது பாதுகாப்பு குறித்து எங்களது அவசர காலத் திட்டமிடல் குழு ஆராய் ந்து வருகிறது.

நிலவரத்தை வெளிவிவ காரத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உன்னிப்பாக கவ னித்து வருகிறார். ஈராக் யுத்தகளத்தில் சிக்கியுள்ள ஒவ்வொரு இந்தியருக்கும் உதவ எந்தவொரு வாய்ப் பையும் மத்திய அரசு தவற விடாது என்றார்.

தற்போது ஈராக்கில் 10 ஆயிரம் இந்தியர்கள் பணி யாற்றி வருவதாகவும், அவர் களில் நூற்றுக்கும் மேற்பட் டோர் தீவிரவாதகளின் முறை யால் பாதிக்கப்பட்ட இடங்களில் சிக்கியிருப்பதாகவும் தகவ ல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே ஈராக்கின் கிர்குக் நகரில், மருத்துவ மனை கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த 60 வெளிநாட் டவர்கள் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளதாகவும், அவர்கள் பாகிஸ்தான், வங்க தேசம், நேபாளம், துருக் மெனிஸ்தான் ஆகிய நாடு களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் ஈராக்கில உள்ள துருக்கி தூதரகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த வாரம தீவிரவாதிகள் கைப்பற்றிய மொசூல் நகரில் துருக்கிய தூதரக அலுவலகத்தில் பணி யாற்றிய 49 பேரையும், துருக்கியைச் சேர்ந்த லாரி ஓட்டுநர்கள் 31 பேரையும் தீவிர வாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யார் வந்தாலும் பா.ஜ.க.வரவேற்கும்

### கட்சியின் மாநில பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(சென்னை)



நடிகை குஷ்பு பா.ஜ.க விற்கு வந்தால் அவரை வரவேற்கத் தயாராகவுள் ளதாக பா.ஜனதா கட்சி யின் மாநில பொதுச் செய லாளர் எஸ்.வானதி சீனி வாசன் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவி க்கையில்,

நடிகை குஷ்பு தி.மு.கவில் இருந்து விலகியது அவரது சொந்த விருப்பம். அவர் பா.ஜ.க.விற்கு வந்தால் வர வேற்போம். யார் பா.ஜ.க.விற்கு வந்தாலும் வரவேற்போம்.

தி.மு.க, அ.தி.மு.க. ஆகிய திராவிட கட்சிகள் மற்றும் காங் கிரஸ் தனித்து போட்டியிட்டதால் தான் வாக்குகள் சிதறி விட்டது. எம்.பி.க்களின் எண்ணிக்கையை பெறா விட்டாலும் கணி சமான வாக்குகளை பெற்றுள்ளோம். பா.ஜ.க. தலைமை யிலான கூட்டணி தமிழ கத்தில் தொடர்ந்து நீடிக்கும்.

இலங்கை தமிழர் பிரச்சினையை பொறுத்தவரை இலங் கையில் வாழும் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதை உறுதி படுத்தும் நடவடிக்கைகளையும், அவர்களின் பிரச்சி னைக்கு தீர்வு காண மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்ய ப்படும் நடவடிக்கைகளை இந்தியா தடுக்கும். மீனவர்கள் கைது செய்யப்பட்டாலும் இலங்கை அரசால் உடனடியாக விடுவிக்கப்படுகின்றனர். அந்த அளவுக்கு மத்திய அரசின் செயற்பாடு உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை;
தீமை செய்வதை நிறுத்துங்கள்.

*~ லாஸ்டாய்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்

வள்ளுவர் நமக்குச் சொல்லித்தராத விடயமே இல்லை எனலாம். அந்த அளவிற்கு வள்ளுவம் மக்களின் வாழ்வுக்கு வழித்துணையாகவுள்ளது.

அறம், பொருள், இன்பம் என்ற வகைப்படுத்தலினூடாக வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தின் வீட்டை அடைதற்பொருட்டு வள்ளுவநெறி வகுக்கப்பட்டுள்ளது.

இருந்தும் வள்ளுவரின் குறட்பாக்களை அறிந்து கொள்வதில் நம் இளம் சந்ததியினர் பின்னடிப்பது வேதனைக்குரியது.

உலகில் எந்த மொழியிலும் இல்லாத அறநெறியை தமிழ்மொழியில் தந்துள்ள வள்ளுவரின் குறட் பாக்களைத் தாய்மொழியாம் நம் தமிழ் மொழியில் படித்து, ரசித்து, ஆத்மார்த்தமாக உணரும் பெரும் பேற்றை நாம் பெற்றோமாயினும் அதனைச் செய்யத் தவறிலழுத்ததே நாம் செய்த பெரும்பிழை எனலாம்.

இந்திய தேசத்திற்கு விடுதலை பெற்றுக் கொடுத்த அண்ணல் மகாத்மா காந்தி, "எனக்கு அடுத்த பிறப்பிருந்தால், ஒரு தமிழனாய் பிறக்க வேண்டும். ஏனெனில் தமிழ் மொழியில் இருக்கக் கூடிய திருக்குறளை அதே மொழியில் படித்து, ரசித்து என்னைப் பண்படுத்துவதற்காக" என்றார்.

அண்ணல் காந்தி அவர்கள் திருவாய் மலர்ந்த வாக்கியம் அற்புதமானவை அது தமிழர்களுக்குப் பெருமை தரக்கூடியவை.

இந்தப் பெருமைக்கு வள்ளுவன் கூறிய ஒரு குறளை இங்கு பிரஸ்தாபிப்பதே நம் பிரதான நோக்கம்.

வள்ளுவனின் 1330 குறள் பாக்களில் ஒன்று, இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் என்பதாகும்.

நமக்குக் கெடுதி செய்தவரையும் மன்னித்து அவர்கள் வெட்கிக்கும் வகையில் அவர்களுக்கு உதவி செய்து விடவேண்டும் என்பது இதன் பொருளாகும்.

ஆம், 2009ஆம் ஆண்டு வன்னிப் போர் நடந்த போது தமிழ் மக்களின் உயிரைப் பாதுக்காக்க வேண்டும் என்று முஸ்லிம் அரசியல் தலைமை எவையும் கோரிக்கை விடவில்லை.

விடுதலைப் புலிகள் மீது அவர்கள் கோபம் கொண்டிருக்கலாம். அதற்காக அப்பாவித் தமிழ் மக்கள் போரில் கொல்லப்படுவதைக் கண்டும் அமைதியாக இருப்பது மிகப் பெருங் கொடுமையல்லவா?

தமிழ் மக்கள் வன்னியில் கொல்லப்பட்ட போது சிங்கள இனத்தைச் சேர்ந்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன போன்ற சிங்களத் தலைவர்கள் அதனை வன்மையாகக் கண்டித்தனர்.

சிங்கள அரசியல் தலைவர்களே வன்னிப் போரை கண்டித்த நேரத்தில், தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம் சகோதரர்கள் சிறுபான்மை இனம் என்ற அடிப்படையில் கூட தமிழ் மக்களைக் காப்பாற்ற குரல்கொடுக்கவில்லை என்ற வேதனையை நினைக்கும் போதெல்லாம் தீராக்கவலை.

அதேநேரம் அளுத்கமவில் பொது பல சேனா நடத்திய வெறியாட்டத்தில் நான்கு அப்பாவி முஸ்லிம் மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டமை கண்டு இதயம் பதைபதைக்கின்றது.

என்னே கொடுமை! உலகம் எங்கோ போய்க் கொண்டு இருக்கையில் எங்கள் நாட்டில் இன, மத, மொழிக் கலவரங்கள். ஏன்தான் இப்படி நாசங்கள் என்று எண்ணிக் கலங்கி; வாழ்வின் வெறுமைக்குத் தள்ளப்படும் நிலையில், முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறையைக் கண்டித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் தமிழ் அரசியல் தலைமைகளும் நடத்தும் கண்டன ஆர்ப்பாட்டத்தைக் கண்டபோது, வள்ளுவன் சொல்லிய இன்னா செய்தாரை ஒறுத்தல்... என்ற திருக்குறள் நம் இதயத்தை தொட்டுச் செல்கின்றது.

# அளுத்கம தாக்குதலைக் கண்டித்து இன்று கண்டன ஆர்ப்பாட்டம் பல்வேறு கட்சிகள் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

அளுத்கம, பேருவளை, தர்கா நகரில் வாழும் சகோதர முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதலை கண்டித்து தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் யாழ்.நகரில் இன்று ஒழுங்கு செய்திருக்கின்ற கண்டன ஆர்ப்பாட்டதிற்கு பல்வேறு கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு ஜனநாயக மக்கள் முன்னணி பூரண ஆதரவு வழங்குவதாக ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் வீடமைப்பு நிலையியல் துறைதலைவருமான சி.பாஸ்கரா தெரிவித்தார்.

சிறுபான்மையினர் மீதான இனவாத தாக்குதல்கள் காலம் காலமாக வெற்றிகரமாக இனவாதிகளால் முன்னெடுக்கப்பட்டு தமிழர் மீதான ஒட்டு மொத்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் நடத்தி வெற்றிகண்ட இனவாதம், சகோதர முஸ்லிம் மக்கள் மீதும் நடத்தப்பட்டதை வன்மையாக கண்டித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒழுங்கு செய்துள்ள இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு எமது தார்மீக ஆதரவை வழங்குவதோடு சகல கட்சிகளும், அமைப்புகளும், மக்களும் ஒன்று திரண்டு ஆதரவை தெரிவிக்க வேண்டும் எனவும் பாஸ்கரா தெரிவித்தார்.

**தமிழ்த் தேசியக் கட்சி**

இன்று இடம்பெறவுள்ள கவனயீர்ப்பு போராடடத்திற்கு முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சி தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.விஜயகாந் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

16ஆம் திகதி பேருவளை மற்றும் அளுத்கம பகுதியில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களுக்கு பௌத்த பெரும்பான்மை மக்களால் அடிக்கப்பட்ட அடுத்த சாவு மணியாகவே நாம் கருதுகின்றோம்.

பொது பல சேனா என்ற அமைப்பினர் கடந்த சில மாதங்களாக முஸ்லிம் மக்கள் மீதும், பள்ளிவாசல்கள் மீதும், கிறிஸ்தவ ஆலயங்கள் மீதும், இந்து ஆலயங்கள் மீதும் தமது காட்டுமிரண்டித்தனமான வன்முறைகளை பிரயோகித்து வருகிறார்கள்.

இது இலங்கையில் வாழ்ந்து வருகின்ற மக்களுடைய ஒற்றுமையை சீர்குலைக்கும் நிகழ்வாகவே நாம் கருதுகின்றோம். இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கமும் ஏனைய தரப்பினரும் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்பதுடன் 16ஆம் திகதி முஸ்லிம்களிற்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறையை நாம் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். அந்த அடிப்படையில் இன்று காலை வெள்ளிக்கிழமை 9 மணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்துள்ள கவனயீர்ப்பு போராட்டத்திற்கு எமது கட்சியின் சார்பாக பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதற்கு நாம் விரும்புகின்றோம் என்பதனை அனைத்து தரப்பினருக்கும் தெரிவிக்கின்றோம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

**லெனினிசக் கட்சி**

முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்களைக் கண்டித்து யாழ்.நகரில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச் லெனினிசக் கட்சியும் தனது ஆதரவை தெரிவித்தன.

பொது பல சேனாவின் குண்டர்கள் அளுத்கம தர்காநகர் முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் மதவெறி கொண்ட மிலேச்சத்தனமானதாகும்.

இதனைக் கண்டித்து இன்று யாழ். நகரில் இடம்பெறும் கண்டன எதிர்ப்பு போராட்டத்தில் எமது புதிய ஜனநாயக மாக்சிச கட்சியும் கலந்து கொள்கிறது. இதில் அனைத்து ஜனநாய்க இடதுசாரி முற்போக்கு சக்திகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக கட்சியின் வட பிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (எ-6)

## ஜே.வி.பியின் துண்டுப் பிரசுரம்

அரசாங்கத்தின் அனுசரணையுடன் அண்மையில் அளுத்கம, பேருவளை உள்ளிட்ட பிரதேசங்களில் இனவாத மோதல்களை ஏற்படுத்திய அமைப்புகள பற்றி மக்களுக்கு தெளிவுப்படுத்தும் நடவடிக்கைகளை ஜே.வி.பி மேற்கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் பௌத்த இனவாத அமைப்புகள் பற்றி மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஜே.வி.பி நேற்று நாடு முழுவதும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் அந்துன் நெத்தி தலைமையில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (எ-11)

## வடக்கின் அபிவிருத்திகளை பார்வையிட வாருங்கள்

### ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு ஜனாதிபதி அழைப்பு

இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்து அங்கு ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை பார்வையிட வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவருக்கு எடுத்துக்கூறினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டேக்ஹிக்கோ நாக்கோ நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மாளிகையில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது போரின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி விரிவாக எடுத்துரைத்தார்.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்களை உடனடியாக மீள்குடியேற்றியமை மற்றும் முன்னாள் போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தியமை போன்றவை தொடர்பாகவும் ஜனாதிபதி விளக்கினார். (அ)

## கொழும்பில் சூதாட்ட மையங்கள் உள்ளன

### பிரதியமைச்சர் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் ஐந்து கசினோ சூதாட்டமையங்கள் இயங்கி வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நகர எல்லைப் பகுதிக்குள் இவ்வாறான கசினோ சூதாட்ட மையங்கள் இயங்கி வருவதாக பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் சில கட்டுப்பாடுகள் காரணமாக கசினோ சூதாட்டமையங்களின் பெயர் விபரங்களை வெளியிட முடியாது என பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டில் இந்த சூதாட்ட மையங்களின் ஊடாக 200 மில்லியன் ரூபாய் வரி வருமானம் திரட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டில், கசினோ சூதாட்டமையங்களை நடத்த சட்ட ரீதியாக அனுமதி காணப்படுகின்றதா என ஹர்ஷ டி சில்வா மற்றுமொரு கேள்விக்கணையை தொடுத்தபோது,

இந்தக் கேள்விக்கு பதிலளிக்க முடியாது எனவும் முதல் கேள்விக்கு மட்டுமே பதிலளிப்பதாகவும் அமுனுகம தெரிவித்துள்ளார். (அ)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### இஸ்லாத்தின் பார்வையில் முதியோர்

மனிதனின் குழந்தைப் பருவத்தையும், முதுமைப் பருவத்தையும் இறைவன் 'பலவீனம்' என்பதாகவே அடையாளப்படுத்துகிறான். அப்படி எனறால் முதுமைக் காலத்தை 'குழந்தைப் பருவம்' என்றும், முதியவர்களை 'குழந்தைகள்' என்றும் நாம் அழைக்க வேண்டும்.

எனவே நாம் நம்மின் தாத்தாக்களை பாட்டிகளை ஒரு குழந்தையைப் போல் பார்த்துப் பார்த்துப் பத்திரமாய் அரவணைத்து கொள்ளல் வேணடும். இச்செயல் இறைவனுக்கு மிகவும் பிடித்தமானதாகும்.


பெற்றோருக்கு உபகாரம் செய்திட வேண்டுமென்று (இறைவன்) கட்டளையிடுகிறான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால் அவர்களை 'ச்சீ' என்று கூடச் சொல்ல வேண்டாம்.

இன்னும் இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழத்துவீராக'. (17:24)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜே.பி.எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## அரியாலை ஸ்டான்லி வெற்றி



ஜே.பி.எல்.பருவகாலம் 2இற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் அரியாலை ஸ்டான்லி விளையாட் டுக் கழக அணி சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை ஒரு விக்கெட்டினால் வெற்றி கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் சயந்தன் 17 ஓட்டங்களையும் விஷ்ணுப்பிரகாஷ் 15 ஓட்டங்களையும் சிந்துஜன் 13 ஓட்டங்களையும் துபிஷன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

உதிரிகளாக 40 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்துவீச்சில் அரியாலை ஸ்டான்லி விளையாட்டுக்கழக அணியின் கஜதீபன் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் துஷாந்தன், விதுஷன், உதயசுபேஷன், ரஜீவன் மற்றும் வசிகரன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 111 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய அரியாலை ஸ்டான்லி விளையாட்டுக்கழக அணி 14.3 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் உதயசுபேஷன் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும் வசிகரன் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களையும் கஜதீபன் 15, சத்தியப் பிரசன்னா 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் விஷ்ணுப்பிரகாஷ் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் ஜனக்ஷன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சஞ்சயன் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அரியாலை ஸ்டான்லி விளையாட்டுக்கழக அணியின் உதயசுபேஷன் தெரிவானார். (சு-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## தெல்லிப்பழை யூனியன் வெற்றி



ஜே.பி.எல்.பருவகாலம் 2 இற் கான போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழக அணியை தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணி 12 ஓட்டங்களினால் வெற்றி கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழக அணி முதலில் களத்தடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் தயாளன் 34 ஓட்டங்களையும் ரகுபதி 16 ஓட்டங்களையும் ஜான்ஷன் மற்றும் மகிழ்ராஜ் தலா 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 29 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழக அணியின் ரஜீவ்குமார் 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் றொகான் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சுபாதீஷ் 44 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் திருக்குமரன் மற்றும் ஜசிந்தன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 158 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களையே பெற்றது.

இதில் றொகான் 26 ஓட்டங்களையும் பாலேந்திரா 24 ஓட்டங்களையும் சலிஷ்டன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனான தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணியின் தயாளன் தெரிவானார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற தன் மூலம் ஜே.பி.எல். பருவகாலம் 2 இற்கான போட்டிகளின் அரையிறுதிக்கு தெல்லிப்பழை யூனியன் அணி தகுதி பெற்றது. (சு-23)

## பற்றீசியன்ஸ் வெற்றி



ஜே.பி.எல்.பருவகாலம் 2 இற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணியை ஒரு விக்கெட்டினால் வெற்றி கொண்டது.

நாணயற்சுழற்சியில் வென்ற தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன் படி முதலில் துடுப்பாடிய தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சுஜீவனின் பந்துவீச் சில் தடுமாறி 19.5 ஓவர்களில் சகலவிக் கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் காந்தசீலன் 38 ஓட்டங்களையும் கணாதீபன் 13 ஓட்டங்களையும் டிலோஷன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 23 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியின் சுஜீவன் 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் நிதர்ஷன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையம் லிவிங்டன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். பதிலுக்கு 106 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பரடிய யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 19.3 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் நோபேர்ட் 18 ஓட்டங்களையும் பத்மமுரளி 13 ஓட்டங்களையும் நவநீபன் மற்றும் கிளிங்டன் தலா 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.


பந்துவீச்சில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் மதுஷன் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் ராஜ்காந்தன் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ரவிசங்கர், கபிலன் மற்றும் ஜனந்தன் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் கலக்கிய யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியின் சுஜீவன் தெரிவானார். இதன் மூலம் ஜே.பி.எல். பருவகாலம் 2 இற்கான அரையிறுதிப் போட்டிக்கு பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி தகுதி பெற்றது. (சு-23)

### பூநகரி அண்ணா வி.க.நடத்திய

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## கிளிநொச்சி உதயதாரகை சம்பியன்





கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில் பூநகரி அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்திய விலகல் முறையிலான உதைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பூநகரியில் இடம்பெற்றது.

இதில் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழகமும் பூநகரி முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழகமும் பங்கு பற்றியது.

இதில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழம் ஒன்றுக்கு பூச்சியம் என்ற அடிப்படையில் வெற்றி வாய்ப்பினை பெற்றுக்கொண்டது.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் வெற்றி பெற்ற கழகத்திற்கும் வீரர்களுக்கும் வெற்றி கேடயங்களையும் வழங்கி வைத்தார்.

இந்த உதைபந்தாட்ட [illegible] பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகு மார், பூநகரி பிரதேச இராணுவ கட்டளை அதிகாரி ஆரியசிங்க, பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் இராசலிங்கம், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் மனோகரன், கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் நிமலதாஸ், அண்ணா விளையாட்டுக்கழகத்தின் தலைவர், செயலாளர் மற்றும் கழகங்களின் பிரதிநிதிகள், [illegible] கலந்துகொண்டனர். (சு-23)

## சாவற்கட்டு மகாத்மா வி.கழகத்தின் உதைபந்தாட்ட போட்டி முடிபுகள்

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்.மாவட்ட மட்டத்தில் இடம்பெற வுள்ள இப் போட்டிகளில் முன்னணி 32 அணிகள் பங்குகொள்கின்றன.

போட்டிகள் 15 நிமிடங்களைக் கொண்ட இரு பாதிகளைக் கொண்டது.

இப்போட்டிகளில் இடம்பெற்ற போட்டி முடிபுகள் வருமாறு,

திங்கட்கிழமை இடம்பெற்ற போட்டியில்,

காளியம்பாள் ஏ விளையாட்டுக் கழகமும் அராலி மாவத்தை விளையாட்டுக்கழகமும் மோதிய போட்டி 1:1 என்னும் கோல் கணக்கில் சமநிலையில் நிறைவுற்றது.

சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் 2:3 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அராலி சென்ஸ்ரார் ஏ விளையாட்டுக்கழகமும் ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 5:0 என்னும் கோல் கணக்கில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

சென்லூட்ஸ் விளையாட்டுக் கழகமும் கலைமகள் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டி 3:3 என்னும் கோல் கணக்கில் சமநிலையில் நிறைவுற்றது. சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போதும் 3:3 என போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

தொடர்ந்து வெற்றியை தீர்மானிக்க நாணயச்சுழற்சி வழங்கப்பட்டு கலை மகள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போட்டியில்,

காக்கைதீவு ஆதவன் பி விளையாட்டுக் கழகமும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 1:0 என்னும் கோல் கணக்கில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

காந்திஜி ஏ விளையாட்டுக் கழகமும் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 6:3 என்னும் கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன்விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (சு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கால்பந்தாட்டம் நடப்பு சம்பியன் ஸ்பெயின் வெளியேற்றம்



உலகக்கிண்ண கால்பந்து தொடரில் இருந்து நடப்பு சம்பியனான ஸ்பெயின் வெளியேறியது. தனது முதல் சுற்றில் சல்வடோர் மைதானத்தில் நடந்த லீக் ஆட்டத்தில் உலக சாம்பியனும், நம்பர் ஒன் அணியுமான ஸ்பெயின், நெதர்லாந்து அணியுடன் பலப்பரீட்சை நடத்தியது. இந்தப் போட்டியில் எதிர்பாராத விதமாய் ஸ்பெயின் அணி 1-5 என்ற மோசமான தோல்வியை சந்தித்தது. இந்நிலையில் அடுத்த போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் இருந்த ஸ்பெயின், சிலி அணியுடன் மோதியது.

பரபரப்பாக சென்ற ஆட்டத்தின் 20-வது நிமிடத்தில் சிலி வீரர் வார்காஸ் கோல் அடித்து தமது அணிக்கு ஒரு கோலை பதிவு செய்தார்.

முதல் பாதி நேரம் முடிய ஒரு நிமிடம் மட்டுமே இருந்த நிலையில் சிலி அணி மீண்டும் ஒரு கோல் அடித்து ஸ்பெயினுக்கு அதிர்ச்சி அளித்து வலுவான நிலையில் இருந்தது.

அடுத்தப் பாதியில் கோல் போட முயற்சித்த ஸ்பெயின் அணி வீரர்களுக்கு சிலி அணி முட்டுக்கட்டை போட்டது.

முடிவில் சிலி அணி 2-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தியது. கால்பந்து தொடரின் இரண்டாவது லீக் ஆட்டத்திலும் தோல்வி கண்டதால், நடப்புச் சாம்பியன் ஸ்பெயின் அணி முதல் சுற்றுடன் வெளியேறியது.

ஸ்பெயினுக்கு எதிராக சிலி அணி வெற்றி பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இன்றைய போட்டி

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இப் போட்டிகளில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள போட்டிகள் வருமாறு:- மாலை 6.30 மணிக்கு சென் ஜேம்ஸ் ஏ விளையாட்டு கழகத்தை எதிர்த்து யாழ் ஐக்கியம் பீ விளையாட்டு கழகமும் இரவு 7.10 மணிக்கு பாரதி பீ விளையாட்டு கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டு கழக மும் மோதவுள்ளன. (க-23)

## கமரூனை வெளியேற்றியது குரோஷியா



கமரூன் அணிக்கு எதிரான உலக கிண்ண கால்பந்து தொடரின் லீக் போட்டியில் குரோஷியா அணி வெற்றி பெற்றது.

பிரேசிலில் உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் 'ஏ' பிரிவு லீக் போட்டியில் குரோஷியா, கமரூன் அணிகள் நேற்று முன்தினம் மோதின.

பிரேசில் அணிக்கு எதிரான முதல் லீக் போட்டியில் தோல்வியடைந்த குரோஷியா தொடரில் நீடிக்க கட்டாயம் வெற்றி பெற வேண்டிய சூழ்நிலையில் களமிறங்கிறது. போட்டியின் ஆரம்பம் முதல் அதற்குரிய பொறுப்புடன் செயல்பட்ட குரோஷியா அணிக்கு 11-வது நிமிடத்தில் ஒலிக் முதல் கோல் அடித்தார்.

போட்டியின் 40-வது நிமிடத்தில் குரோஷிய வீரர் மான்சூயிக்கின் முதுகு பகுதியில், கமரூனின் அலெக்சாண்டர் சாங் தனது முழங்கையால் தாக்கியதால் 'ரெட் கார்டு' காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் 10 வீரர்களுடன் போட்டியை தொடர்ந்த கமரூன் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பின் இர்ண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த குரோஷியா அணிக்கு பெரிசிக் (48), மான்சூயிக் (61, 73) ஆகியோர் அடுத்தடுத்து அடி கொடுத்தனர். இதற்கு கடைசி வரை போராடிய கமரூன் அணி வீரர்களால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. முடிவில், குரோஷியா அணி 4-0 என வெற்றி பெற்றது கமரூன் தொடரில் இருந்தும் வெளியேறியது. (க)

# சிறுபான்மை இனத்தவர்கள் இலங்கையில் வாழ முடியாது

## அதன் வெளிப்பாடே அளுத்கம சம்பவம் என்கிறார் இராஜகுமாரன்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சிறுபான்மை இனத்தவர் எவரும் வாழமுடியாது என்பதனையே அளுத்கம சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையிலே சிறுபான்மை இனத்தவர்கள் எவருக்கும் வாழ்வதற்கான உரிமையில்லை என்ற நிலைமை காணப்படுகின்றது.

இங்குள்ள மிகப்பெரிய சிறுபான்மையினமான தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் அடக்கப்பட்டு விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கின்ற அரசு அடுத்ததாக இருக்கின்ற சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களின் உரிமையை நசுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

அங்குள்ள தீவிரவாதிகள் முஸ்லிம் மக்களின் வணக்கஸ்தலங்களினையும் அவர்களின் இருப்பிடங்களினையும் அழித்து 83, 77-ம் ஆண்டு காலங்களில் தமிழ் மக்களின் சொத்துக்களினை அழித்தனர்.

அதேபோல ஒரு நிலைமையை இன்று முஸ்லிம் மக்கள் மீது திணிக்க தொடங்கியுள்ளனர். இலங்கையில் சுதந்திரம் இருக்கின்றது. அனைத்து மக்களும் சமமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என கூறிக்கொண்டு இருக்கும் அரசு இன்று சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் மீது பயங்கரமான வன்முறையினை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இதன் பின் புலத்திலே யார் இருக்கின்றனர் என தொட்டத் தொளிவாக தெரியும் நிலையில் இதன் பின்னணியில் பலம் பொருந்தியவர்கள் உள்ளனர்.

முஸ்லிம் மக்களிற்கு எதிரான இவ் வன்முறைகளை சிறுக ஆரம்பித்து மிகபெரிய வன்முறையாக வளர்ந்துள்ளது.

இந்த நிலையிலே யாழ்ப்பாணம் பல்கலைக கழகத்தின் ஆசிரியர் சங்கமான நாங்கள் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து சமூகங்களினையும் இணைத்து எந்தவொரு பாரபட்சமும் இன்றி அனைத்து இனங்களும் சமமாக வாழவேண்டும் என கோரி இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

எந்தவொரு சிறுபான்மையினத்திற்கும் எதிராக எந்தவொரு வன்முறையும் பாவிக் கக்கூடாது எனவும் குறிப்பாக இன்று முஸ்லிம்களிற்கு எதிராக இடம்பெறுகின்றவன் முறைகள் நிறுத்தப்பட்டு அதற்குரிய குற்ற வாளிகள் இனங்காணப்பட்டு உடனடியாக தண்டனை வழங்கப்பட வேண்டும்.


யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கமான நாங்கள் பல்கலை சமூகத்துடன் இணைந்து அரசை கேட்டுக் கொள்வது என்னவென்றால்,

இலங்கை இன, மத, மொழி பாகுபாடற்ற நாடாக வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உடனடியாக வன்முறைகளினை நிறுத்தி இன்று அவலப்பட்டு கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்றார். (எ-4)

# மரண அறிவித்தல்

## இளையதம்பி அருணாசலம்

### (சவாரி ஐயாண்ணை)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கு தம்மளையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி அருணாசலம் (சவாரி ஐயாண்ணை) 19.06.2014 அன்று காலமானார். அன்னார் காலம் சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், சியாமளா (பல் வைத்தியர் கொழும்பு), சியாமதி (ஜேர்மனி), மனோகரன் (அளவெட்டி), சிவாகரன் (நீர்வேலி), சிவாநிதி (அளவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரட்ணம் (பல் வைத்தியர் கொழும்பு), சிவபாக்கியராஜா (ஜேர்மனி), ஜெயராணி (உப தபாலகம் நீர்வேலி), ஜெயச்சந்திரன் (செலான் வங்கி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிசா, உதாரணன், கயானன், கயானி, மதுஷா, மார்க்கவி, பிரணவன், அனுஷன், சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(6905)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்துடன் இணைந்து...

முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் நியூஸ் பெஸ்ட் வினவியதை அடுத்து அவரது பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் அதற்கு பதிலளித்துள்ளார்.

இலங்கையின் பொறுப்புக் கூறல மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள தலைமைத்துவத்தை வரவேற்பதுடன், ஐ.நா செயலாளர் நாயகம் மனித உரிமை ஆணையாளருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குகிறார்.

யுத்தத்தின் பின்னரான சவால்கள் தொடர்பிலும் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பிலும் அவர் நன்கு அறிந்துள்ளார். எனவே சர்வதேச சமூகத்துடன் செயற்திறனாக ஒன்றிணைந்து செயற்படுவற்கு அவர் இலங்கையை உற்சாகமூட்டுகிறார்.

மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பிலான உள்ளக ரீதியிலான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதன் மூலம் நிலையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

ஒருசில நாட்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதி ஊடகப் பேச்சாளர் நியுஸ்பெஸ்டுக்கு தெரிவித்தார்.

இலங்கையின் தென் பகுதிகளில அண்மையில் பதிவான சம்பவங்கள் தொடர்பில் செயலாளர் நாயகம் அவதானம் செலுத்தியுள்ளார். மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை அவர் மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார்.

இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற துன்புறுத்தல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ளக ரீதியில் விசாரணைகளை மேற்கொண்டு மீண்டும் அவ்வாறு இடம்பெறாதவகையில் இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும்.

இவ்வாறான சம்ப்வங்கள் உக்கிரமடைவதற்கு இடமளிக்க கூடாது எனவும் அவர் கூறியுள்ளார்.

அந்த சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு இலங்கை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஐ.நா செயலாளர் நாயகம் கூறியுள்ளார். (எ-11)

# அடிப்படைவாத குழு...

களிடம் கோரிக்கை விடுத்திருந்ததையும் முஸ்லிம் பேரவை நினைவூட்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் தேவையும் கட்டாயமானதுமாக உள்ளது என்பது எமது எண்ணமாகும்.

நாட்டில் மீண்டும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த ஜனாதிபதியின் அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுகின்றோம்.

கலாசாரங்களுக்கு மரியாதை வழங்குவது, இன மற்றும் மத சகிப்பு தன்மை என்பது இந்த நாட்டின் தொன்மையான பாரம்பரிய வளமாக இருந்து வந்துள்ளது.

அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் நடந்த வன்முறைகள் தன்னிச்சையாக நடக்கவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக பொது பல சேனா, சிஹல ராவய, இராவணா பலய ஆகிய அமைப்புகள் முஸ்லிம் மக்கள் மற்றும் அவர்களின் பொருளாதார நிலைகள் மீது மூலோபாயமாக திட்டமிட்டு, ஒருங்கிணைந்து தாக்குதல்களை நடத்தியுள்ளன.

அடிப்படைவாதிகள் முஸ்லிம் மற்றும் இதர சிறுபான்மை மதத்தனருக்கு எதிராக தொடர்ந்தும் வன்முறைகளை தூண்டி வருவது நிறுத்தப்பட வேண்டும்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் நடத்த தவறு மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் நடந்து விடக் கூடாது என்பது முக்கியமானது.

தனிப்பட்ட மோதல்கள் நாட்டில் இன வன்முறை தொடர்ந்து விடக் கூடாது எனவும் இலங்கை முஸ்லிம் பேரவை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது. (எ-11)

# இலங்கை அரசு தொடர்பில் மௌனம் காக்கும் ஐ.நா.

(கொழும்பு)

40 ஆயிரம் பொதுமக்களை கொன்று குவித்த இலங்கை அரசாங்கம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை இன்னும் மௌனம் காத்து வருவதாக இன்னர் சிட்டி பிரஸ் கவலை வெளியிட்டிருக்கிறது.

நேற்று ஐக்கிய நாடுகள் சபையின வானொலி தினமாகும். இந்த தினதல் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் இன்னர் சிட்டி பிரஸ் இணையத்தளம் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

இதில், இறுதி யுத்தம் இடம்பெற்ற போது இலங்கையின் இராணுவத்தினரால் 40 ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த விடயம் குறித்து பல தடவைகள் இன்னர் சிட்டிபிரஸ் கேள்வி எழுப்பி இருக்கிறது.

ஆனால் ஐக்கிய நாடுகளின் உததியோகபூர்வ பதில்கள் எவையும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் இனியாவது இதறகான பதிலை ஐக்கிய நாடுகள் சபை வழங்குமா? என்று அந்த ஊடகம் கேள்வி எழுப்பி இருக்கிறது. (எ-11)

# இலங்கை முஸ்லிம்களு...

ருந்து தீவிரவாதத்தை விரட்டியடிக்க இந்தியாவும், இலங்கையும் இணைந்து செயல்பட வேண்டியது முக்கியம்.

இதுதொடர்பாக இலங்கை இந்தியா இணைந்து செயல்பட வேண்டும், பேச வேண்டும்.

பாகிஸ்தானியர்களால் பயிற்சி அளிக்கப்படும் இலங்கை முஸ்லிம்கள் இந்தியாவுக்குள் குறிப்பாக தமிழகத்திற்குள் ஊடுருவி வருகிறார்கள்.

இது அபாயகரமானது. பாஜக, தமிழக அரசியல் கட்சிகளுடன் கூட்டணி வைத்து கொண்டு ஒரு தவறை செய்துள்ளது.

தமிழகத்தில் உள்ள அதிமுக, திமுக உள்ளிட்ட அனைத்து கட்சிகளுமே விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு அளிப்பவர்கள் தான் என்றார். (எ-11)

# விசாரணை...

போதைய நிலைமைகள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து தாம் விரிவாக விளக்கினர் என்று கூட்டமைப்பு பிரதிநிதிகள் விளக்கினர். (எ-11)


## வேண்டுகோள்

பன்னையம்பதி வீரகத்தி விநாயகர் ஆலயம், புலோலி வடக்கு, பருத்தித்துறை. மேற்படி ஆலயத்தின்மீது சட்ப்படி உரிமை கொண்டாடுபவர்கள் யாராவது இருந்தால் 02.07.2014 க்குமுன் நேரடியாகவோ, தொலைபேசி மூலமோ, கடிதத்தின் மூலமோ ஆலய தர்ம பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டி நிற்கின்றோம்.

இந்த கோவிலின் சட்டப்படி உரிமையை நிலை நாட்டுவதற்காகவே இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம்.

விலாசம் :-
த.சத்தியமோகன்
பன்னையம்பதி,
பருத்தித்துறை

த.சத்தியமோகன் - தலைவர்
தர்மபரிபாலன சபை
பன்னையம்பதி வீரகத்தி
விநாயகர் ஆலயம்.

(6902)

T.P. No :- 077 509 8965


# ஒன்றரைக்கோடி பெறு...

மீட்கப்பட்டுள்ளதுடன், கஞ்சாவினைக் கடத்துவதற்கு பயன்படுத்திய படகு, கைத்தொலைபேசி, ஜீ.பி.எஸ் ஆகியனவும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது, இந்தியாவில் இருந்து கடல் வழியான யாழ்ப்பாணம் மாதகலுக்கு பெரும் தொகையான கஞ்சாவினை கடத்தி வருவதாக இளவாலைப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார தலைமையிலான குழுவினர் மாதகல் கடற்படையினருடைய உதவியுடன் அங்கு தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது படகு ஒன்றில் கஞ்சாவினை கடத்தி வந்த நபர்களை கண்டுபிடித்துள்ளனர். குறித்த படகினை பொலிஸார் நெருங்கிய வேளை படகில் இருந்த ஒருவர் கடலுக்குள் பாய்ந்து தப்பிச் சென்றுள்ளார்.

இருப்பினும் படகில் இருந்த மற்றுமொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 59 பொதிகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கோடியே 33 இலட்சம் பெறுமதியான 133 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து கஞ்சா கடத்துவற்கு பயன்படுத்திய படகு, கைத் தொலைபேசி, ஜீ.பி.எஸ். கருவி, படகு இயந்திரம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் கைது செய்யப்பட்ட நபரிடம் நடத்திய விசாரணையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பல இடங்களுக்கு குறித்த கஞ்சா பொதிகள் கைமாற்றுவதற்காகவே இங்கு கடத்தி வரப்பட்டதாக தெரியவந்துள்ளது. மேலும் கஞ்சா விற்பனையில் ஈடுபடுவர்களுடைய தகவலும் கிடைக்கப்பெற்றுள்ளது. விரைவில் அவர்களும் கைது செய்யப்படுவார்கள்.

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக அதிகளவில் கைப்பற்றப்பட்ட கஞ்சா இதுவே. கைப்பற்ற கஞ்சாவும், கைது செய்யப்பட்ட நபரும், மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

மாதகல் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப் படையில் யாழில் அதிகமானவர்கள் கைது செய்யப்படுவாகள் எனறு எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-4,6)


## கட்டார் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

கட்டார் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| Waiter (Restaurant) | Qr.1100 + Food + OT |
| Waiter Helper | Qr.900 + Food + OT |
| Cleaning | Qr.900 + OT |
| Home Decorate Helper | Qr.900 + OT |
| Mason (Experience) | Qr.1500 + OT |
| AC Technician (Experience) | Qr.2000 - 3000 + OT |
| Tinkering | Qr. 1800 + OT |
| Electrician (Experience) | Qr. 1500 + OT |
| Steel Fixer | Qr. 1200 + OT |
| Coil சுற்றுபவர் | Qr. 1500 + OT |
| Cushion Worker | Qr. 1200 + OT |
| Marble Fixer | Qr. 1500 + OT |
| AutoCAD | Qr. 2000 - 2500 + OT |

மேற்குறிப்பிட்ட வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன. தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம். எதிர்வரும் 22-ம் திகதி கட்டார் நாட்டவர்களால் (அரபிக்காரர்களால்) நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் Green Grass Hotel ல் நடைபெறவுள்ளது.

கடவுச்சீட்டு, Passport Size Photos 8, சுயவிபரக்கோவை மற்றும் அனுபவ சான்றிதழ் என்பனவற்றுடன் எதிர்வரும் 22-ம்திகதி காலை 9 மணிக்கு நேரில் வரவும். உடன் தொடர்பு கொள்ள.

(C-7694)

Lanka Voice :- 0779527575 / 0766697789

Air Trust,
(Government Approved Human Resource Consultants)
S.L.B.F.E (Licene No.2490) No.945, Maradana Road, Colombo - 08


# அளுத்கம வன்...

வரை பேரணியாக நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொணடிருந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பொலிவியாவில் விருது; அளுத்கமவில் இன வன்முறை, உடைக் காதே ! உடைக்காதே மதவழிபாட்டுத் தலங்களை உடைக்காதே !

அழிக்காதே அழிக்காதே சிறுபான்மையினர் சொத்துக்களை அழிக்காதே !, அளுத்கம சொல்வது பொலிஸ் அதிகாரம் மாகாணங்களுக்கு வேண்டும்.

அன்று - 1983 இல் தமிழர்கள் இன்று - 2014 இல் முஸ்லிம்கள், 30 ஆண்டு கால யுத்தம் கற்றுத் தந்தது என்ன? சிறுபான்மை சமூகத்தை நிம்மதியாக வாழ விடு, பொது பல சேனா பயங்கரவாத அமைப்பு இல்லையா? என எழுதப்பட்ட வாசகங்களினை ஏந்தியிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் முஸ்லிம் மாணவர்கள், மாணவிகள், தமிழ் மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை முஸ்லிம்கள் மீதான வன்முறையினை கணடித்து இன்றைய தினம் யாழ் நகரிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள் [illegible] (எ-4,6)

# முஸ்லிம் பகுதிகளி...

மேற்கொள்ளப்பட்டிருந்தது. மன்னார் நகரில் தமிழ் வர்த்தகர்களும் இந்தக் கடையடைப்பில் ஈடுபட்டிருந்த போதிலும், ஏனைய இடங்களில் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மட்டுமே பூட்டப்பட்டிருந்தன.

சிறுபான்மை இனத்தவராகிய முஸ்லிம்கள் மீது அடாவடித்தனமாக மேற்கொள்ளப்பட்ட வன்முறையானது, அந்த மக்களின் பாதுகாப்பையும், அவர்களது இருப்பையும் கேள்விக்குறியாக்கியிருப்பதாக கடையடைப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் கூறினர்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், அரச படைகளிடம் மட்டுமே ஆயுதங்கள் இருக்கின்றன என கூறப்பட்டிருந்த போதிலும், அளுத்கமவில் முஸ்லிம்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. இதனை செய்தது யார் என்பது தெரியவில்லை. இதற்கு பொறுப்புயார் என்பதும் தெரியவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

இதேவேளை கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று வியாழக கிழமை மூன்றாவது நாளாக இந்த கடையடைப்பு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதால் தொடர்ந்தும் வழமை நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு காத்தான்குடியில் முஸ்லிம் வர்த்தகர் நலன்புரி சங்கத்தின் தலைவர் கே. எம். எம். கலீல் ஹாஜியாரின் இல்லம் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை நளளிரவு அடையாளந் தெரியாத ஆட்களினால் கழிவு ஆயில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்தும் பொது பல சேனாவிற்கு எதிராகவும் கவன ஈர்ப்பு பேரணியொன்றும் நடைபெற்றுள்ளது.

இந்த பேரணி முடிவில் இடம்பெற்ற சம்பவமொன்றின் போது அங்கு இருந்த சிறப்பு அதிரடிப் படை அதிகாரியொருவரால் தான் தாக்கப்பட்டதாக பிரதேச உள்ளூராட்சி சபைத்தலைவரான எம்.ஏ. எம்.அன்ஸில் கூறினார். (எ-6,11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org